www.padippakam.com

...ழில் படைப்பிலக்கிய மாத இதழ்

'ஏ...
யாயிரு...
பணத்...
...
தி...

எழு...
பே...
ப...
பு...
ம...

...ன், 1992

விலை-ரூ.3.



படிப்பகம்

www.padippakam.com

# கவிதைக்கும்

பாவோடும் வீதியிலே பந்தா டும்நாம்
பாயோடும் நோயோடும் பழகிப் போனோம்.
பூவோடும் புனலோடும் போயா டும்நாம்
பேயோடும் நாயோடும் போர்செய் கின்றோம்.
சாவோடும் பசியோடும் சரசம் பேசிச்
சதிராடும் நாம்அங்கே அடிமை யானோம்.
நாவோடும் நோவோடும் உறவா டும்நாம்
நடமாடும் படமானோம் காணீ ரோகாண்.

ஆழ்கடலும் ஏழையவன் கண்ணீர்; மார்பில்
அலைபுரளும் நித்திலமும் வியர்வை முத்தே.
வீழுடலின் புதைகுழியே அழகுப் பூங்கா;
விதிமாறிப் போகுநரும் பசித்தாய்ச் சொத்தே.
ஏழ்மாடம் விட்டுதினம் பெழுது போக்காய்
இறங்கிவரும் இதயத்தின் எழிலைக் கொன்றார்
வாழ்வற்றார் சார்பில்ஒரு பெருமூச் சைத்தான்
வடித்தாரா? வஞ்சகத்தைக் காணீ ரோகாண்.

விண்மணியே! இரத்தமழை சொட்டச் சொட்ட
விடிவானச் செருமுகத்தில் இரவைக் கொன்று
மண்மீது பகல்செய்வாய்; பின்னை ஏனோ
மடிகின்றாய் மேற்கடலில் மறைந்தே நீயும்?
கண்ணிருந்தும் குருடர்களாய்ப் புரட்சி காணும்
கருத்திருந்தும் தரித்திரராய் வாழ்வார் நோக்கிப்
புண்பட்ட காரணத்தால் நீயும் ·மாலைப்
பொழுதென்னும் துறவுடையில் புதைகின் றாயோ!

நல்லிரவே! உன்மடியில் உலகைப் போட்டு
நலம்பாடித் துயிலூட்டு கின்றாய்; மீண்டும்
கொல்லிரவிக் கதிர்முகத்தில் பின்னை ஏன்நீ
குதித்தாழக் கடலடியில் மறைய வேண்டும்?

—தொடர்ச்சி பின் அட்டை உள் பக்கம்—

படிப்பகம்

www.padippakam.com

**கவிதாசரண்**
*தமிழில்படைப்பிலக்கிய மாதஇதழ்*

ஜூன், 1992

மாதத்தின் முதல் வாரத்தில் வெளி வருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
*சந்தாவை M.O. செய்க.*

மனித நேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

படைப்புகளை அனுப்ப மற்றும் தகவல் தொடர்புகளுக்கு:
ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை **580, T.H.Road,** சென்னை-**21**இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், **31, T.K.S.** நகர் சென்னை-**19**இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை யுண்டு.

இதழ் பற்றிய உங்கள் மதிப்பீடுகளும் இதழுக்கான உங்கள் சந்தாவும் உங்கள் இலக்கிய வேட்கையின் வெளிப்பாடுகளாகட்டும். செயல்படுக.

| " 'இரவிலே வாங்கினோம்
இன்னும விடியவே இல்லை'
என்கிற வரிகள் கிராமியத் திரைப்படம் ஒன்றினால் அதி பிரபலமடைந்தது. அதே வேளையில்,
'இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே!
என்று 15-1-'47இலேயே கவிதை வரைந்த பாரதிதாசன் ஆவேசம் அறியப்படாமலும் போயிற்று." |

நெல்லை சு. முத்துவின் "பரிணமித்து வரும் கவிதையியல்" என்னும் கட்டுரைத் தொடர் அடுத்த இதழில்.

கவியரசர் கண்ணதாசனின் பிறந்த நாள் ஜூன் 24. காடு பற்றிய அவர் கட்டுரை மூலம் நினைவு கூர உதவியவர் திரு இராம.கண்ணப்பன் அவர்கள்

—வேதாந்த விசாரம் கொள்வது மனிதனால் மட்டுமே செய்யக் கூடிய மேலான காரியம். இதை ஏன் அறிவு ஜீவி என்பவன் தனக்கு அன்னியமான விஷயமாக்குகிறான்?

படிப்பகம்

www.padippakam.com



# ஆராதனை

கயலுக்குக் கடல்ஒரு சிறையானால்-வரும்
கனவுக்குத் துயில்ஒரு தடையாகும்-கருங்

குயிலுக்கு இசையொரு தொழிலானால்-பசுங்
குதலைக்குத் தாய்வெறும் பெயராகும்-கடும்

வெயிலுக்கு முகில்ஒரு குடையானால்-நல்ல
வீணைக்கு நரம்பொரு முடிச்சாகும்-பசும்

வயலுக்குப் பயிர்ஒரு சுமையானால்-இந்த
வயிற்றுக்குப் பசிஒரு நோயாகும்-அற்பச்

செயலுக்கு நினைவொரு வழியானால்-பற்றும்
சிறுமைக்கே வாழ்வென்று பெயராகும்-நல்ல

உயிருக்குச் சதையொரு சுவையானால்-மெய்
உணர்வுக்குப் பரம்பொருள் தொலைவாகும்.

வீரனுக் கருள்மனம் விலங்கானால்-அவன்
வெற்றிக்குப் பேய்க்கணம் துதிபாடும்-உடன்

சேரினம் சிறுமனக் குழுவானால்-வெறிச்
செயலுக்கு நியாயங்கள் பலியாகும்-உருள்

தேரினுக் கூர்வலம் தொலைவானால்-சுடர்த்
தீயினுக் கதுசிறு விறகாகும்-உயிர்ச்

சாரத்தை வார்த்தைகள் புறக்கணித்தால்-உதிர்
சருகுகள் பசும்பொன்னை நகையாடும்-செயல்

காரணம் தேடலை விடுமானால்-கடுங்
காரிருள் வழித்துணை விளக்காகும்-பரி

பூரணம் நெஞ்சுக்குப் பகையானால்-பெரும்
பேரின்ப வெளியொரு பாழாகும்.

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திரும்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.


# கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று ஜூன், 1992 இதழ் எட்டு


## பக்தி சுகம்

சண்முகப் பிரியனாய் சங்கரியின் மைந்தனே
சரணம் சரணம் என்றே
சன்மார்க்கப் பக்தனாய் என்மார்க்கம் தனைக்காணச்
சங்கல்பம் பூண்ட என்னை

பெண்முகம் ஒன்றுவந் தாட்கொண்ட விந்தையில்
பித்தாய் மயங்கு கின்றேன்
புத்திளங் கன்னியைப் புறக்கணித் தொதுக்கவும்
பேதைநான் வழியும் காணேன்.

கண்சுகம் கந்தவேள் கருணைத் தடாகமாம்;
கதிர்வேலைக் காட்டும் பார்வை.
கருநீளப் பின்னலோ மயில்கொத்தும் நாகமாம்;
கானமயில் சாயல் அவளாம்;

படிப்பகம்

www.padippakam.com

பெண்சுகம் காட்டும்இரு கனிகளும் வேலவன்
பெருங்கோயில் கலசங்களாம்.
பேரழகு முருகனின் பெயருக்கு வடிவாகிப்
பொருளூட்டும் கவிதை மகளாம்.

வானூரும் நிலவில்சிறு கறையுண்டு; எனைத்தேடும்
வனப்பூவில் மணமே உண்டு.
வடிவேலன் கொடிவாழும் செஞ்சேவல் கொண்டை நிறம்
வனிதையவள் இதழில் உண்டு.

தேனூறும் மாங்கனியும் இளந்தனிரும் குளிர்நிழலும்
திரண்டு கனிந் தமுதமாகித்
திசைநாலும் கீழ்மேலும் மயிலேறி வரும்முருகன்
திருநாமம் பாடும்மகளே.

மானிடப் பிறவியின் மகத்தான அனுபவம்
மனிதனாய் வாழும் சுகமே;
மையல்தரும் தையலுடன் கைபிணைத்து மெய்யணைத்து
மயங்கிய பின் மனித சுகமே.

ஊனுண்டு தானுண்டு வானுண்டு மீனுண்டென்
றுயிர்வாழ்தல் கட்டையினமே.
உள்ளுருக்கும் கந்தசுகம் இந்தமகள் வந்தசுகம்
உவப்பான பக்தி சுகமே.



படிப்பகம்

www.padippakam.com

காடு பற்றி



# நான் ஏன் எழுதுகிறேன்?

கண்ணதாசன்

உலகத்தைத் துயில் எழுப்பப் புதிய ராகத்தைப் பாடிக் கொண்டு எழுகிறான் இளங்கதிரோன்!

மனிதர்கள் விழிக்கிறார்களோ, இல்லையோ, காடு விழித்துக் கொள்கிறது.!

பறவைகள் சலசலக்கின்றன!

மிருகங்கள் சோம்பல் முறிக்கின்றன!

தூங்காத மிருகங்கள் ஒரு பெருமூச்சு விடுகின்றன!

இயற்கையின் இன்ப விளையாட்டில் வன விலங்குகள் பங்கு கொள்கின்றன!

சிருஷ்டியின் ஆழ்ந்த ரகசியம் அவற்றுக்குத் தெரிவது போல் மனிதர்களுக்குத் தெரிவதில்லை!

மரங்கள் மிருகங்களுக்காகவே பழுக்கின்றன!

நதிகள் விலங்குகளுக்காகவே ஓடுகின்றன!

இதோ சிருஷ்டி தேவனின் தர்ம சத்திரத்தில் தேவதைகளின் குரல் கேட்கிறது!

மான்களாக, மந்திகளாக,

வண்ண வண்ணப் பறவைகளாக,

உயரத்தில் வானை எட்டும் ஒட்டைச் சிவிங்கிகளாக,

தோற்றத்தில் மலை போலிருக்கும் யானைகளாக. வாய்மொழி இல்லாத குடிமக்கள்; வாய்மொழி இல்லாத ராஜாக்கள் தர்பார் நடத்தும் ராஜாங்கம் இது! எல்லைக் கோடுகள் இல்லாத ஒரு சாம்ராஜ்யம்.

அங்கே தனக்கென்று பதுக்கி வைத்துக் கொள்ளும் முதலாளிச் சிங்கங்களும் உண்டு!

உறவுக் கெல்லாம் விருந்து படைக்கும் ராஜாளிகளும் உண்டு!

உயிருக்குப் பயந்தோடும் பலவீனர்களும் உண்டு!

ஓடினாலும் விடமாட்டேன் என்று துரத்தும் வல்லவர்களும் உண்டு!

மனிதனுடைய ஆதிக்கத்தைக் கட்டுப்பாடாக எதிர்க்கும் புகழ் பெற்ற யானைக் கூட்டங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

''உன் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்கிறேன். என்னை விட்டு விடு'' என்று கெஞ்சும் மான் குட்டிகள்!

விலங்குகளுக்கு இது வீடு!

ஆனால், வேட்டைக்காரர்களுக்கு காடு!

பரந்து கிடக்கும் சமவெளியில் பலகோடி ஆண்டுகளாக இறைவன் நடத்தும் லீலையே இந்தக் காடுகள்!

பாலைவனம், கோரைப் புற்கள், புயலால் குவிக்கப்பட்ட மணல் திட்டுகள், பெய்த மழையில் உருவாக்கப்பட்ட காட்டு நதிகள், பயம் வந்தால் பதுங்கிக் கொள்ள சிறிய பெரிய புதர்கள், பயம் நீங்கினால் ஏறி நின்று சிறகடிக்க இளம் குன்றுகள்!

ஆதி மனிதர்களின் மூதாதையர்கள் நம்மை அழைக்கிறார்கள்!

''இன்றைய உலகத்தைவிட நாங்கள் என்ன தாழ்ந்து போனோம்? வந்து பாருங்கள்!'' என்று கூப்பிடுகிறார்கள்!

அவர்கள் பசியை உணர்கிறார்கள்; காதலை உணர்கிறார்கள்; நோயை உணர்கிறார்கள்; பகையையும் உணர்கிறார்கள்!

அவர்களுக்குப் பகுத்தறிவு எதற்கு?

குட்டியைக் கௌவும் போது பூனைக்கு இருக்கும் பல் வேறு; எலியைக் கௌவும் போது இருக்கும் பல் வேறு!

தாய்மை அங்கே பரிபூரண சக்தி கொண்டு விளங்குகிறது!

தகப்பனைத்தான் இனங்கண்டு கொள்வதில்லையே தவிர, தாய், அண்ணன், தங்கை, பாட்டி என அனைவரும் உணரப் படுகிறார்கள்!

கொல்லப்பட்ட தங்கள் இனத்தைச் சுற்றிக் கூடி அழும் குணம் ஒவ்வொரு விலங்குக்கும் இருக்கிறது!

எல்லையில்லாத வனவெளியில் எல்லையில்லாத பேரன்பு!

காரணமின்றித் தொல்லை செய்யாத மிருகங்கள்!

அடிமைப் பட்டவர்களின் விடுதலை கீதங்களுக்கு அடி எடுத்துக் கொடுத்த ஜாதிகள்!

உலக விடுதலைப் போராட்டத்தின் முதல் கதாநாயகர்கள்!

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டு, மகாகவிகளால் வருணிக்கப் பட்டு, மகாத்மாக்களால் பாதுகாக்கப்பட்டு, மனிதர்களால் வேட்டையாடப்படும் வாயில்லா விலங்குகள்!

அவை பேசா விட்டால் என்ன?

நாம் பேசுவோம்!

அவை பாடாவிட்டால் என்ன?

நாம் பாடுவோம்!

அவை தங்களை அறியா விட்டால் என்ன? நாம் அவற்றை அறிவோம்!

சுயசரிதம் எழுதத் தெரியா அவற்றைப் பற்றி நாம் ஒரு சரிதம் எழுதுவோமே!

படிப்பகம்

www.padippakam.com

## நேசம் பேசும் வாசகர்கள்

○ தாங்கள் வெளியிடும் இலக்கிய இதழ் ''கவிதா சரண்''ஐத் தற்செயலாகப் படிக்க நேர்ந்தது. சென்னையிலிருந்து இம் மாதிரி ஓர் இலக்கிய இதழ் வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி.

பத்திரிகையின் தரமும் மற்ற அம்சங்களும் நன்றாக இருந்தன. தமிழ் ஆர்வம் மிகுந்த என் நண்பர்களுக்காக நான் சந்தா செலுத்தவிரும்புகிறேன்.

இத்துடன் எனக்கும் என் நண்பருக்கும் சேர்த்து ரூ. 72 அனுப்பியுள்ளேன். விரைவில் மேலும் சில நண்பர்களுக்காகவும் சந்தா செலுத்த எண்ணியுள்ளேன். இது நான் என் நண்பர்களுக்குக் கொடுக்கும் பரிசாகும்.

இக்பால் பாஷா, சென்னை-11

○ நாற்று புதிய தலைப்பு; போற்றுதற்குரியது. 'அமைதி'யில் இறைவனிடம் விண்ணப்பிக்கும் முறை இதயத்தைத் தொடுகிறது. 'இவர்கள் இந்தியர்கள்' யதார்த்தமான கவிதை. சிறு கதைகளில் 'போன்சாய்' முதலிடம். 'சுபோதிகள்' படிப்பவரையே அதிர்ச்சிக்குள்ளாக்கும் வண்ணம் படம் பிடித்துக் காட்டியுள்ளீர்கள்.

மொத்தத்தில் நல்லதொரு ஓவியப் பையில் உள்ள பழக் குலைகள் போல் மே இதழ் நன்கு விளங்குகிறது.

முத்து எத்திராசன்,
சென்னை-17

○ கவிதாசரண்
படைப்பிலக்கிய வானில்
விந்தைகள் புரிய வந்த
விடி வெள்ளி.
கால வெள்ளத்தில்
கலந்து ஓடாமல்,
மானுட பூமியில்
நிலைத்து நிற்கும்.
விரசங்களைத் தாங்கி வருகின்ற
வியாபார ஏடுகளுக்கு நடுவே
முதுகெலும்பு வளையாமல்
நிமிர்ந்து நடக்கும்
இலக்கிய மனிதன்.
எண்ண விதைகளை
எழிலாய்த் தூவுங்கள்;
சாதனைப் பூக்கள்
சரித்திரம் படைக்கட்டும்.

பூவேந்தன், சென்னை-57

---

### முத்தைய தாசன்

### சிக்கனப்படுத்து

சிந்தாமல், சிதறாமல்,
சினத்தைச் சிக்கனப்படுத்து;
மீண்டுமொரு
யுகப் புரட்சி வரலாம்-
அப்போது செலவழிக்கலாம்.

### அதிசயக் கறையான்

இரு கையுள்ள மனிதனையும்
முடமாக்கும்
முடக்குவாதமாய்
மூட நம்பிக்கை!
இது
அரிப்பது தெரியாமல்
மூளையை அரிக்கின்ற
அதிசயக் கறையான்!

படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நாற்று மேடை

இலக்கியப் போர்வை மூடிய
பணப்புலி ஏடுகளுக்கு மத்தியில்
கவிதாசரண் ஓர் அக்னிச் சுடர்!
பொந்துக்குள் இருக்கும்
இந்த அக்னிக் குஞ்சு
போலி இலக்கியத்தை ஒரு நாள்
பொசுக்கும்; உறுதி!

உண்ட மயக்கத்தில்
கனவு பேசும் கற்பனாவாதிகளுக்கு
கவிதாசரண் ஊஞ்சல் பலகையல்ல!
வாழ்க்கையை ரத்தமும் சதையுமாகத்
தரிசிக்கும் யதார்த்தவாதிகளின்
பாசறைக் கூடம்!
ஏடுகளை 'மெய்' எழுத்துகளால்
வியாபாரம் செய்துகொண்டிருக்கும்
'பூர்ஷ்வா' வாதிகளுக்கிடையே
'உயிர்' எழுத்துகளுக்கு
உரம் போடப் புறப்பட்டிருக்கும்
அகிம்சைப் போரின் ஓர்
ஆரம்பம் கவிதாசரண்!

இங்கே—
எழுத்துகள் பண முட்டை இடும்
வாத்துகள் அல்ல; அவை
இதயத்தை எழுதுகோலில் மலர்த்தும்
இலக்கிய நாற்றுகள்! ஆம்!
அந்த இலக்கிய நாற்றுகளுக்கு
மேடை போட்டு வளர்கிறது
கவிதாசரண்.

**குடந்தை பரிபூரணன், வடகரை**

படிப்பகம்

www.padippakam.com




கவிதாசரண்

**அ**ன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. பகல் ஒரு மணிக்கு அறையைப் பூட்டிக் கொண்டு சினிமாவுக்குக் கிளம்பினேன். வேலை நாட்களில் கல்லூரிக்குச் செல்வதை எப்படி வழக்கமாகக் கொண்டிருந்தேனோ, அதைப் போலவே ஞாயிற்றுக் கிழமைகளில் சினிமாவுக்குச் செல்வதையும் அப்போது வழக்கப்படுத்திக் கொண்டிருந்தேன். இன்ன படம்தான் பார்ப்பது என்றில்லை. ஏதாவதொரு படத்திற்குச் சென்று பொழுதையும் பொருளையும் போக்கி விட்டு வருவதொன்றே என் நோக்கம். சினிமா பார்ப்பது, அதுவும் வாரம் தவறாமல் பார்ப்பது ஒரு கெட்ட பழக்கம் என்றால், அதைத் தவிர வேறெந்தக் கெட்ட பழக்கமும் அன்றுவரை என்னிடம் வம்புக்கு வந்ததில்லை; வரவும் விட்டதில்லை. அந்தத் தூய்மையில் எனக்குக் கொஞ்சம் கர்வமே உண்டு. அது ஒரு சுகமான கர்வம்.

அன்று சினிமாவுக்குக் கிளம்பிய எனக்குச் சோதனையே போல் எங்கும் டிக்கெட் கிடைக்கவில்லை. நானும் சளைக்காமல் ஒவ்வொரு படக் கொட்டகையாக ஏறி இறங்கி, தொடர்ந்து நடந்து, காந்தி மார்க்கெட்டைத் தாண்டி சென்ட்ரல் டாக்கீசுக்கு வந்து சேர்ந்தேன். அங்கே ஒரு பழைய தமிழ்ப்படம் ஓடிக் கொண்டிருந்ததால் அதிர்ஷ்ட வசமாக எனக்கு டிக்கெட் கிடைத்தது. டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த போது படம் ஓடிக்கொண்டிருந்தது.

உள்ளே குவிந்து கிடந்த இருளை ஊடுருவி நோக்கும் சக்தியற்று, தட்டுத் தடுமாறி, ஒரு வரிசையில் நுழைந்து, வெகு ஜாக்கிரதையாக நடந்தேன். சற்றுத் தூரம் சென்றதும் யாரோ உட்கார்ந்திருப்பது போல நிழலாடக் கண்டு, சிறிது நின்று நிச்சயப் படுத்திக் கொண்ட பின், அவர்கள் அருகில் உட்கார்ந்து கொண்டேன்.

கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, உடம்பில் காற்றாடும் பொருட்டு சட்டைப் பித்தான்களைக் கழற்றியபடி திரையைப் பார்த்தேன். ஏதோ ஒரு கோஷ்டி நடனம் துரித கதியில் ஓடிக்கொண்டிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com

''படம் தொடங்கி வெகு நேரமாகிவிட்டதா?'' என்று அருகில் இருந்தவர்களைக் கேட்டேன்.

''இருபது நிமிஷம் ஆகியிருக்கும்.''

நான் திடுக்கிட்டுப் போனேன். அது ஒரு பெண்ணினுடைய குரல். அதாவது, நான் ஒரு பெண்ணருகே உட்கார்ந்து விட்டேன். அந்த உண்மை என்னை அச்சமும் கூச்சமும் கொண்டு மிரளும்படி செய்து விட்டது.

''ஓ! ஐயாம் வெரி சாரி,'' என்றேன்.

''டசன்ட் மேட்டர். டேக் இட் ஈஸி.''



நான் சட்டென்று திரும்பிப் பார்த்தேன். அதற்குள் என் கண்கள் பார்க்கும் சக்தியைப் பெற்றுவிட்டன. என்னையடுத்து இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களையடுத்து, அந்த வரிசையே வெறிச்சோடிக் கிடந்தது. எனினும் நான் அவர்கள் அருகில் அமர்ந்திருப்பது சரியென்று படவில்லை. அது போன்ற செயலுக்கு நான் ஒரு நாளும் பழக்கப்பட்டவனல்ல.

''எக்ஸ்க்யூஸ் மி. இருட்டில் தெரியவில்லை. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்'' என்று நான் எழுந்த போது, அருகிலிருந்தவள் சட்டென்று என் கையைப் பற்றி, ''பரவாயில்லை. உட்காருங்கள். துணையாயிருங்கள்,'' என்றாள்.

நெகிழ்ந்தாற் போன்ற அவள் குரலும் ஸ்பரிசமும் பதட்டமும் என்னை அடியோடு கலக்கிவிட்டன. நான் உட்கார்ந்து விட்டேன்.

வியர்வை வெள்ளத்தில் என் உடம்பு தெப்பமாகிவிட்டது. நெரிபட்டுத் திக்குமுக்காடும் புறாக் குஞ்சுகளைப் போல என் புலன்கள் துடித்தன. தீக்கங்குகளைப்போல் என் உணர்வுகள் சுட்டன. நான் கண்களை மூடித் திறந்து, மூச்சையடக்கிப் பின்னர் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

மனம் மெல்ல மெல்லத் தெளிந்த போது, மின்னலைப் போல் என்னுள் கோபம் பொங்கியது. ஆனால் மின்னலுக்குப் பின் குவியும் மையிருளைப் போல ஒரு சபலமும் விகார மயக்கமும் அதே சமயம் என்னுள் கிளர்ந்தன.

திரையில் ஓடிய படம் எனக்குத் தெரியவில்லை என் மனதில் சுரந்த உணர்ச்சிகள் எனக்கு விளங்கவில்லை. நான் அசையாமல் உட்கார்ந்திருந்தேன். என் மனமோ, அருகே இருந்தவளைப் பற்றி அதிசயப்பட்டுக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் என் கையின் மேல் அவள் கை வந்து மெல்லப் படர்ந்ததையும் என் உடம்பு சிலிர்த்ததையும் உணர்ந்தேன் பூரான்களைப் போல் ஊர்ந்து வந்த அந்த விரல்கள்

படிப்பகம்

www.padippakam.com

என் விரல்களைத் தேடிச் சென்று பின்னின. மயக்கமே முடிவில்லாத வெள்ளமாய் அலை வீசிச் சீறியது. கணப் பொழுதின் ஆவேசத்தில் அவளை நன்றாகத் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்து நகைத்தாள். பூரணமான அழகு ஒரு சுளிப்பில் விரிசலுற்று விகாரமாகிவிடும் அலங்கோலம் அவள் புன்னகையில் நெளிந்தது. அவள் விரல்கள் என் கையில் வெறியின் துள்ளலோடு நெரிந்தன. அவள் தன் கையை மெல்ல விடுவித்துக் கொண்டாள்.

இடைவேளை மணியோசை என் தலையில் பொரியும் இடிகளாய் ஒலிக்க, சரேலென்று வெளியே வந்துவிட்டேன். வெளிச்சத்தில் என் கண்கள் கூசின. அங்கே படம் பார்க்க வந்திருந்தவர்கள் சொற்ப மனிதர்களே. அவர்களிடையே இருளின் இரகசியம் போல நான் தனித்து நின்றேன்.

'ஒரு சிகரெட் பிடித்தால் என்ன?'

சிகரெட்டை அதுவரை கையால் கூடத் தொட்டறியாத எனக்கு அந்த எண்ணம் ஆச்சரியமாயிருந்தது. அந்த ஆச்சரியம் என்னை விட்டு விலகி, பக்குவம் என்னைத் தடுத்து நிறுத்துவதற்குள் உடனே சென்று ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்றவைத்துக் கொண்டேன். என்னுடைய பக்குவத்தைக் குலைத்துக் கொண்டது திருப்தியாகவே இருந்தது.

எனக்குப் புகைக்கத் தெரியவில்லை. தலையைச் சுற்றியது. அருகில் நின்ற தூணைப் பிடித்துக் கொண்டேன். நிதானமின்றி சிகரெட்டை உறிஞ்சியதில் புகை தொண்டைக்குள் போய்த் திக்குமுக்காடினேன். தொண்டை கிழிந்து விடுவது போல இருமியதில் கண்களில் நீர் வழிந்தது. பிறகு நினைவே தடுமாறியது. அப்படியும் சிகரெட்டைக் கீழே போடவில்லை. கடைசி வரை இழுத்தேன். என் பலவீனம் எனக்குத் தெரிந்தது. என்ன மாதிரியான பலவீனம்! ஆனால் என்ன மாதிரியான சுகம்!



மயக்கம் தீர்ந்து தடுமாறாமல் நடக்க முடியும் என்ற தெம்பு வந்த போது படம் தொடங்கி விட்டது. நான் உள்ளே சென்றேன். இடம் மாற்றிக் கொள்ளலாமா என்ற யோசனைக்கே இடம் வைக்காமல் மீண்டும் அதே இடத்தில் சென்று அமர்ந்து விட்டேன்.

என்னுடைய பலவீனத்திற்கு ஈடு கொடுப்பதே போல் மீண்டும் அவள் கை என் மேல் ஊர்ந்து விளையாடியது. நான் அதைப் பற்றிக் கொள்ளவும் இல்லை; நிராகரிக்கவும் இல்லை. அவள் ஸ்பரிசம் அப்போது தேவைப் பட்டதே போல் உட்கார்ந்திருந்தேன். புகை பிடித்த போது ஏற்பட்ட

படிப்பகம்

www.padippakam.com

மயக்கமும் கிறுகிறுப்பும் முடிவில்லாமல் நீள்வதே போல் நினைவு தடுமாறிப் போய் உட்கார்ந்திருந்தேன். படம் ஓடிக் கொண்டிருந்தது. அதில் ஒரு காட்சி கூட என் நினைவைத் தொடவில்லை. நேரத்தின் ஓட்டத்தையே மறந்து, உடல் புல்லரிக்க, 'இது எந்த நியாயத்தில் சேர்ந்தது?' என்று அதிசயப்பட்டுக் கொண்டிருக்கும் போது படம் முடிந்துவிட்டது.

நான் வெளியே வந்து விட்டேன்.



வெளியேறும்கூட்டத்திற்கு வழிவிட்டு நின்ற என்னை நோக்கி அடுத்த நிமிஷம் அந்தப் பெண்கள் வருவதைக் கண்டேன். என்னால் அவர்களை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை. அவர்கள் என்னருகே தயங்கினர். நானும் தயங்கினேன். கொட்டகையில் என்னருகே உட்கார்ந்திருந்தவள் என்னைப் பார்த்துச் சிரித்து, ''நீங்கள் ஸ்டூடண்டா?'' என்றாள்

''ஆமாம்.''

''எங்கே?''

''செய்ன்ட் ஜோசப் காலேஜில்.''

''நாங்கள் ஹோலி கிராசில் படிக்கிறோம். என் பெயர் மோகினி. இவள் என் தோழி பெயர் பார்வதி,'' என்றாள்.

நான் அப்போதுதான் அவள் தோழியை நிமிர்ந்து பார்த்தேன். இரண்டு கைகளையும் கூப்பி, வாய் திறவாமல் வணக்கம் தெரிவித்து நின்ற அவள் முகத்தைப் பார்த்ததும் என் மேனி சிலிர்த்து விட்டது. என்னுடைய பக்குவத்திற்குக் கிடைக்க வேண்டிய வெகுமானமே போல் அவள் நின்றாள். ஆனால் சற்று முன் நான் பலவீனப் பட்டுவிட்டதால், அந்த வெகுமானத்தை விட்டுச் சற்று விலகிவிட்டது போலும், அந்த இடைவெளியை அடைத்துவிட என் உடலையே நெடுஞ்சாண் கிடையாக அவள் முன்னே நிலத்தில் கிடத்திவிடலாம் போலும் இருந்தது. பார்வதி அல்லவா அவள்? உடனே நான் கைகளைக் கூப்பி, ''வணக்கம். என் பெயர் சங்கரன்,'' என்றேன்.

என் பதிலில் அவளுடைய கூப்பிய கரங்கள் பூவிதழ்களாய்ப் பிரிந்து விழுந்தன. அவள் கண்கள் கருணையோடு நகைத்தன. என் மனத்தை அக் கண்கள் மலர்க் கணைகளாய்த் தைத்தன. அவள் தலை தாழ்ந்தது. சில கணங்களில் ஒரு புனிதமான தரிசனம் கிடைத்து விட்டவனைப்போல நான் பூரித்துப் போனேன்.

அந்தக் கணத்தோடே மோகினி மூன்றாம் மனுஷியாகிவிட்டாள். என்னை அவள் தொட்டதும் நான் அதற்கு ஈடு கொடுத்ததும், ஜனத் திரளில் அறுமுகமில்லாத இருவர் இடித்துக் கொண்டதே போல்,

படிப்பகம்

www.padippakam.com

பொருளற்ற அனுபவமாகத் தாழ்ந்துவிட்டது.

இவையொன்றையும் உணராதவளாய் மோகினி மேலும் பேசினாள். நானும் பேசினேன். பிறகு அவர்கள் பிரிந்து சென்றார்கள்.

"நாம் மீண்டும் சந்திப்போம். மறந்து விடாதீர்கள்," என்றாள் மோகினி. பார்வதி மீண்டும் கைகளைக் கூப்பி விடை பெற்றாள்.

நான் என் அறைக்குத் திரும்பி விட்டேன்.

அன்று இரவு வெகு நேரம் விழித்திருந்தேன். என் அறையின் திறந்து கிடந்த ஜன்னல் வழியே மலைக்கோட்டை தெரிந்தது. இரவின் விரிப்பில் நிழற் கோடாய்த் தோன்றியது மலைக்கோட்டை. அதன் உச்சியில் ஒளிரும் பாதரச விளக்கு வட்ட நிலாவைப் போல் சுடர்விட்டது. என் மனதில் சஞ்சலமோ விகார மயக்கமோ இல்லை. மாறாக, அவள் இருந்தாள். அவள் உருவம் நிழற்கோடாய் மனத் திரையில் கோலமிட, அவள் முகம் மலைக்கோட்டையின் உச்சி விளக்கைப் போல் ஜீவச் சுடராய்ச் சிரித்தது. என் புலன்கள் பற்று வேர் பாய்ச்சி அவள் மேல் சுற்றிப் படர்ந்தன. கற்றாழைப் புதர் பேல் படர்ந்த மாதவிக் கொடி போல் அவள் தோன்றினாள். மோகினி அவள் முன்னே கற்றாழைப் புதராகத்தான் சிலுப்பிக் கொண்டு நின்றாள். அவள் அழகும் அலங்காரமும் விகாரமாய்த் துருத்திக் கொண்டு நின்றன. திரண்ட சதைக் கோளங்கள் அதிர, கண்டவர்களின் நெஞ்சங்களில் வெறியை விதைத்துக் கொண்டு நடக்கும் அந்த மோகினியின் அருகே, பூவிதழ் அதிர்ந்தாற் போல், பெண்மையின் பூரணமே போல் அவள் நடக்கும் அற்புதத்தைக் கண்டேன்!

---

—செல்லும் இடத்தை அடைவதை விடவும் நம்பிக்கையோடு பயணம் செய்வதே மேலானது.

—ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ்

---

அதன் பிறகு பல தடவைகள் அவ்விருவரையும் சந்தித்தேன். அத்தனை தடவைகளும் மோகினியே பேசினாள். என் மேல் மோகம் கொண்டு விட்டவளாகவே நெருங்கினாள். கற்றாழையின் கனத்த கூர்முள் குத்திக் கிழிக்க வருவதே போல் அவள் நெருக்கம் என்னை அச்சுறுத்தியது. முதல் தடவை அவள் தன் கையை என் மேல் படர விட்ட போது என்னுள் எழுந்த கோபமே நியாயமாகி, முற்றும் அவளை வெறுக்கும் படியே முடிந்தது. ஆனால் அந்தக் கோபத்தை நான் வெளிக்காட்டிக் கொள்ளாமலேயே பழக நேர்ந்தது. காரணம், கற்றாழையை நான் வெறுத்தொதுக்கும் செயல் அதன் மேல் படர்ந்துள்ள மாதவிக்கொடியையும் வெறுப்பதாகக் கருதப்படக்கூடாதே என்ற தாபம்தான். மோகினியின் மேல்

படிப்பகம்

www.padippakam.com

கோபம் பொங்கும் போதெல்லாம் என் கண்கள் பார்வதியின் மேல் பதியும். கருணையோடு நகைக்கும் அந்தக் கண்களின் முன்னே நான் ஒரு நிரபராதி என்பதை உணரும் போது என் கோபத்தை விழுங்கிக் கொள்ள வேண்டி நேரும்.

ஒரு நாள் மலைக்கோட்டை நுழை வாயிலில் உள்ள மாணிக் கவிநாயகர் கோவிலுக்கு நான் போய்க் கொண்டிருந்த போது, எதிர் வரிசையிலிருந்து ஓடி வந்து திடீரென்று என் கையைப் பிடித்தாள் மோகினி. கணத்தில் என்னுள் கோபம் பொங்கியது. ஆனால் அதற்குள் பார்வதி அங்கே வந்துவிட்டாள். அவளின் கூப்பிய கைகளில் என் கோபம் ஒடுங்கி விட்டது. மெல்ல என் கையை விடுவித்துக் கொண்டு கை கூப்பினேன்.

''நீங்கள் என்ன கண்ணிலேயே தென்படுவதில்லை? பார்வதி பார்த்துச் சொல்லாவிட்டால் இப்பொழுது கூட உங்களைப் பிடித்திருக்க முடியாது. உங்களைப் பார்க்க வேண்டும் என்று எவ்வளவு துடித்தேன் தெரியுமா?'' என்றாள்.

''அப்படியா? என்ன விஷயம்?'' என்றேன்.

''என்ன விஷயமா? விஷயம் இருந்தால்தான் உங்களைப் பார்க்க வேண்டுமா?''

---

—ஒன்றை நினைக்க வெட்கப் படாத நாம், அதைச் சொல்லவும் வெட்கப்படக் கூடாது.

மார்கஸ் துல்லியஸ் சிசரோ

---

''அப்படியா?''

''என்ன அப்படியா?''

பார்வதி என்னை அனுதாபத்தோடு பார்த்தாள். அந்தப் பார்வை கருணையோடு என்னைத் தேற்றியது. மோகினி சிரித்தாள். அந்தச் சிரிப்பு மோக முள்ளாய் என்னைக் குத்தியது.

''எங்கே போய்க் கொண்டிருக்கிறீர்கள்?'' என்றாள் மோகினி.

''பிள்ளையார் கோவிலுக்குப் போகிறேன்.''

''தினமும் போவீர்களா?''

''முடிந்த போதெல்லாம்.''

''கோவிலுக்குப் போகும்படி அப்படி என்ன தப்பு பண்ணிவிட்டீர்கள்?''

''இப்படி உன்னிடம் எக்கச்சக்கமாய் நின்று கொண்டிருக்கிறேனே, இந்தத் தப்பு போதாதா?''

''ஓகோ! அப்படியானால் நானும் கோயிலுக்கு வரவேண்டியதுதான். வரட்டுமா?''

பார்வதியே இப்படிக் கேட்டிருந்தால்... கேட்டவள் மோகினி. நான் பேசவில்லை. ''சரி, சரி, ஒரேயடியாய்யோசிக்காதீர்கள். நான் வரவில்லை. அது போகட்டும். நாளை மாட்டினி ஷோவுக்கு ராக்சியில் ரிசர்வ் செய்யப் போகிறோம். உங்களுக்கும் சேர்த்துத்தான். மறக்காமல் வந்து விடுங்கள். என்ன சரிதானா?'' என்றாள்.

நான் சம்மதிக்கும்படி ஆயிற்று. மோகினி 'டாடா' காட்டினாள். பார்வதி கையெ

படிப்பகம்

www.padippakam.com

டுத்து வணங்கினாள். இப்படிக் கூப்பிய கைகளுடன் வந்து, கூப்பிய கைகளுடன் பிரியும் இந்தப் பெண் வாயைத் திறக்க மாட்டாளா? என்று ஏங்கினேன். கூப்பிய கைகளில் தன் இருதயத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, அதைக் கூர்ந்து பார்க்க எனக்கொரு சந்தர்ப்பம் கொடுக்காமலேயே மீண்டும் வாங்கித் தன் கைகளில் கூப்பிக் கொண்டு சென்று விடுகிறாளோ என்று பரிதவித்தேன். அவளும் இப்படித் தவிக்க மாட்டாளா? மோகினி தவிக்கிறாள். கற்றாழை முள் பற்றிக் கிழிக்கத் தவிக்கும் தவிப்பு அது.

மறுநாள் ராக்சிக்குச் சென்றேன். வழக்கம் போலவே என்னருகில் மோகினியும் அவளையடுத்துப் பார்வதியும் உட்கார்ந்து கொண்டனர். மோகினி அன்று பசித்த புலியைப் போலிருந்தாள். அடிக்கடி என் மேல் துவண்டு சாய்ந்தாள். என் கையைப் பற்றிக் கொண்டு பெருமூச்சுவிட்டாள்.

இடைவேளை முடிந்து படம் தொடங்கிய சிறிது நேரத்தில் அவள் என் மேல் தன் உடலைச் சாய்த்து, ''டார்லிங், இன்று நாம் வெளியே தங்குவோமா?'' என்றாள். நான் விழித்துக் கொண்டேன். கருகிய கூந்தலின் துர்நாற்றமே போல் அவள் விரக வெறி என் குடலைப் புரட்டியது. நான் அவளை மெல்ல விலக்கினேன்.

அவள் மேலும் நெருங்கி, ''சரி என்று சொல்லுங்கள், டார்லிங்,'' என்று உருகிக் கெஞ்சினாள்.

''நோ, என்னால் முடியாது,'' என்று தீர்மானமாகச் சொன்னேன்.

''உண்மையாகவா? அவ்வளவு இரக்கமில்லாதவரா? கல் நெஞ்சுக்காரரா?''

நான் மௌனமாக இருந்தேன். அவள் சொல்ல முடியாத ஏமாற்றத்தில் நிலை குலைந்து சீறினாள்.:

''நீங்கள் ஓர் ஆண் பிள்ளையா?''

நான் அவளை நிதானமாகப் பார்த்தேன்; மென்மையாகச் சிரித்தேன்; அழுத்தமாகச் சொன்னேன்:

''ஒரு தூர்த்தையின் முன்னால் ஆண் பிள்ளையாக இருப்பவன் கோழையைப் போல் கூசுவான், அல்லவா? நான் ஒரு கோழை.''

அவள் சட்டென்று எழுந்து விட்டாள்.

''வாடி பார்வதி, போகலாம்,'' என்று அவளையும் தள்ளிக் கொண்டு விடுவிடென்று வெளியேறி விட்டாள். பார்வதி விடை பெறாமலேயே போய் விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com

—அறிவதற்கு முதல் படி நாம் அறியாமை மிக்கவர்கள் என்பதை அறிவதே.

—லார்ட் டேவிட் செசில்

இரண்டு மாதங்களுக்குப் பிறகு பல்கலைக்கழகத் தேர்வு வந்தது. அந்த இடைக்காலத்தில் அவர்கள் இருவரையும் ஒன்றாக நான் பார்க்கவே இல்லை. ஒரு நாள் மோகினி இன்னோர் ஆடவனுடன் செல்வதைப் பார்க்கும்படி நேரிட்டது. அவள் என்னைப் பார்க்கவில்லை. எனக்கு அந்தக் காட்சி திருப்தியையே தந்தது. அந்தத் திருப்திக்கு உள்ளூர ஒரு காரணம், 'மோகினி என்னைத் தொடர்ந்த போதெல்லாம் கூடவே வந்த பார்வதி, அப்போது அவளோடு துணை வரவில்லை' என்பதாகவும் இருக்கலாம்.

பார்வதியைப் பார்க்க வேண்டும் என்று மனம் ஏங்கியது. வழிதான் தெரியவில்லை. அவள் இதுவரை என்னோடு ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. அவள் இருதயத்தைத் திறந்து பார்ப்பதற்கு ஒரு சாவியும் கிடைக்கவில்லை. தவித்ததும் தனித்ததும்தான் மிச்சம். ஓங்கிய மலைக்கோட்டையின் உச்சி விளக்கைப் பார்த்துக் கொண்டே, அவள் முகத்தை மனதில் எழுதிக் கொண்டதைத்தவிர வேறொன்றும் தெரியாமல் உன்மத்தம் பிடித்து உட்கார்ந்திருந்த இரவுகள் அநேகம்.

தேர்வுகள் எல்லாம் முடிந்துவிட்டன. அன்று இரவு விடுதியிலிருந்த மாணவர்கள் அனைவரும் சினிமாவுக்கும் சுற்றுவதற்கும் கிளம்பிவிட்டனர். வெறிச்சோடிக் கிடந்த விடுதியில் நான் மட்டுமே தனித்திருந்தேன். விடிந்ததும் பெரும்பாலான மாணவர்கள் ஊர்களுக்குக் கிளம்பி விடுவார்கள். நானும் கிளம்ப வேண்டியதுதான். ஆனால் அதற்கு முன் பார்வதியைப் பார்த்துவிட்டு, முடிந்தால் ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டுக் கிளம்புவது என்று முடிவு செய்தேன். 'ஒருவேளை இன்றிரவே அவள் ஊருக்குக் கிளம்பியிருந்தால்?' .. கிளம்பியிருக்கக் கூடாது என்று வேண்டிக் கொண்டேன். பார்ப்பதென்று தீர்மானித்துவிட்டால் அவள் ஊருக்கே சென்று கூடப் பார்க்கலாம்தான். அவள் முகவரியும் தெரியும் ஆனால் தீர்மானம்? அதைத்தான் தீர்மானிக்கத் தெரியவில்லை.

மறுநாள் காலையில் வெளியே சாப்பிட்டேன். பிறகு பார்வதியைப் பார்க்க அவள் கல்லூரி விடுதிக்குச் சென்றேன். அவள் இன்னும் ஊருக்குப் போகவில்லை என்றும் வெளியே போயிருப்பதாகவும் சொன்னார்கள். அவள் வந்ததும் நான் தேடி வந்ததாகவும் மீண்டும் வருவதாகவும் சொல்லும்படி கேட்டுக் கொண்டு வெளியேறி, நேரே மலைக்கோட்டைக்கு வந்தேன்.

மலைக்கோட்டை மேல் ஏறும் முன், வாசலில் உள்ள

படிப்பகம்

www.padippakam.com

மாணிக்க விநாயகரைத் தரிசித்துவிட்டுப் பிரகாரத்தைச் சுற்றி வந்தபோது, கோயிலின் இடப்புறத்திலுள்ள விக்கிரகத்தின் முன்னால் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைக் கடக்க நேரும் போது தற்செயலாய்ப் பார்த்தேன்.



என் உடல் சிலிர்த்து விட்டது. பார்வதியே அங்கு நின்று கொண்டிருந்தாள். நான் நின்று, அன்பையெல்லாம் கண்களில் திரட்டிக் கொண்டு அவளைப் பார்த்தேன். அவளோ கண்களை மூடிக் கை கூப்பி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய முகம் சாம்பிக் கிடந்தது. அப்போது அவள் என்னவோ நிராதரவாக நிற்பது போலத் தோன்றியது. அந்த மாதவிக்கொடி கற்றாழையின் மேல்தான் படர்ந்திருந்தது எனினும், அந்தக் கற்றாழையும் இன்றி இப்போது காற்றில் துவள்வது போல் என்னைக் கலக்கியது. அவள் இலேசில் கிளம்புவதாகத் தெரியவில்லை.

நான் சற்று அருகில் சென்று, மெல்லிய குரலில், "பார்வதி," என்றேன். அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். என்னைக் கண்டதும் 'குப்' பென்று அவள் கண்கள் பொங்கிவிட்டன. அதன் பிரதிபலிப்பே போல் என் கண்களும் கலங்கிவிட்டன. அவள் உடனே கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"உங்களையா பார்க்கிறேன்! என்னால் நம்பவே முடியவில்லை. ஆமாம்."

குழந்தையைப் போல் அவள் கூவினாள். அந்தக் குரலும் வடிவும் பரவசமும் என்னைச் சிலிர்க்க வைத்தன.

"நாம் மேலே போகலாமே. வருகிறீர்களா?" என்றேன்.

"ஓ...போகலாம். வாருங்கள்," என்று உடனே புறப்பட்டு விட்டாள்.

துவளத் துவள நடையிட்டுப் படியேறி அவள் என் பின்னே வர, நான் முன்னே நடந்தேன்.

"மெதுவாகப் போங்கள். நான் வர வேண்டாமா? என்னையே இப்போது சுமக்க முடியவில்லை," என்று சொல்லி ஓசைப் படாமல் சிரித்தாள். குங்குமம்போலச் சிவந்த அவள் முகத்தைப் பார்த்து நான் சற்று நின்றேன். அவள் கண்கள் வழக்கத்தைவிடப் பூரித்து விளங்கின.

"தேர்வெல்லாம் நன்றாக எழுதியிருக்கிறீர்களா? நான் ஏதோ எழுதியிருக்கிறேன்," என்றாள்.

"காலையில் சாப்பிட்டீர்களா, இல்லையா?" என்று கேட்டேன்.

"சாப்பிட்டேனே. ஏன் உங்களுக்குச் சந்தேகம்?"

படிப்பகம்

www.padippakam.com

—நாம் சிலராய் இருக்கும் போது நம் துணிச்சலுக்குச் சோதனை ஏற்படுகிறது; பலராய் இருக்கும் போது நமது சகிப்புத் தன்மைக்குச் சோதனை வருகிறது.

—ரால்ஃப் டபிள்யு.சாக்மேன்

"பின்னே முகமெல்லாம் ஒரேயடியாய் அழகிட்டுச் சாம்பிக் கிடக்கிறதே? வேண்டுமானால் கீழே போய்ச் சாப்பிட்டு வரலாம், வாருங்கள்."

"நல்ல கூத்து, போங்கள். பேசாமல் மேலே போங்கள்."

நாங்கள் மேலே சென்றோம். வழியில் தென்பட்டதையெல்லாம் ஆசையோடு பார்ப்பதும் அதிசயப் படுவதுமாக அவள் நடந்தாள். மேலே சென்றதும் மணிக்கூண்டுக்கு அருகிலுள்ள மண்டபத்தில் அமர்ந்தோம். எப்படிப் பேசத் தொடங்குவது என்ற யோசனையில் நான் சற்றுத் தயங்கினேன். அவள் மலையின் தெற்குப் புறத்தில் முழுமையாகப் பரந்து கிடந்த நகரத்தைச் சுட்டிக் காட்டி, "இந்தக் காட்சி எவ்வளவு அழகாய் இருக்கிறது, பாருங்கள்! நாம் எவ்வளவு உயரத்தில் உட்கார்ந்திருக்கிறோம்! நம்மையும் இந்த நகரத்தையும் நாம் நடந்து வந்த பாதை வடக் கயிறு போலப் பிணைத்திருக்கிறது. நாம் தேரில் உட்கார்ந்திருக்கிறோம். இந்தத் தேரை தெருவுக்கு அழைக்கிறது இந்த நகரம். இல்லையா?" என்று குரலும் முகமும் குதூகலிக்க ஆசையோடு சொன்னாள். 'என்ன அற்புதமாய்ப் பேசுகிறாள்!' என்று வியந்தேன்.

"நீங்கள் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று வெகு நாட்களாக ஆசைப் பட்டேன். இப்பொழுதோ நயம் மிகுந்த கவிதையாக இருக்கிறது இந்தப் பேச்சு. எங்கே ஊமையாக இருந்து விடப் போகிறீர்களோ என்று கூட அஞ்சியதுண்டு," என்றேன். அவள் வெட்கம் குழையத் தன் தலையைக் குனிந்து கொண்டாள்.

"கோவிலுக்கு வரும் முன், உங்கள் விடுதிக்குச் சென்று விசாரித்துவிட்டுத்தான் வந்தேன்," என்றேன். அவள் நிமிர்ந்த வேகத்தில் ஆச்சரியமும் ஆனந்தமும் அவள் கண்களில் பூத்தன. எனினும், அவளுக்கே இயல்பான ஆழமும் அமைதியும் நிதானமான பெருந்தன்மையோடு அவளை அலங்கரித்துவிட்டன.

"நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். என்னைப் பார்க்க வரும் உறவினர்களில் உங்களுடைய பெயர் பட்டுமே விடுதிப் பதிவேட்டில் இப்போது இருக்கிறது," என்று சொன்னாள்.

"ஓகோ! அதனால்தான் என் பெயரைச் சொன்னதும் உடனே விவரம் சொன்னார்களோ?"

அவள் அதை ஆமோதித்தாள். இத்தனை பெரிய நகரத்தில் அவளைச் சந்திக்கக் கூடிய உறவாய் நான் மட்டுமே இருந்

படிப்பகம்

www.padippakam.com

திருக்கிறேன் என்ற உண்மை என்னைச் சிலிர்க்க வைத்தது.

"ஆனால் இன்றுதான் நாம் பேசிக் கொள்கிறோம். இன்றைக்குத்தான் உங்களைத் தனியாகச் சந்திக்கிறேன்," என்றேன்

"ஆமாம்...... மோகினி ஊருக்குப் போய்விட்டாள்."

தவிர்க்க முடியாதபடி மோகினி அங்கே நினைவு கூரப்பட்டுவிட்டாள் நான் கூசிப் போனேன். ஒரு கணத்தில் அந்த இனிய சூழ்நிலை மோகினி என்பவளின் நினைவால் கவிந்து மூடிய பனிமூட்டமே போல் சில்லிட்டுவிட்டது. பார்வதிக்கும் எனக்கும் இடையே ஒரு மதிற்சுவரே எழும்பி விட்டது போல் தோன்றியது. என்னாலும் அதைத் தவிர்க்க முடியவில்லை.

"உங்களை விட்டுவிட்டா?" என்றேன்.

"அவள் என்னை வெகு நாட்களுக்கு முன்பே விட்டுவிட்டாள். அன்று சினிமாவிலிருந்து பாதியிலேயே எழுந்து போய்விட்டோமே, அன்றைக்கே. ஆனால் அவள் நல்லவள். பணக்காரவீட்டுப் பெண். நான் ஏழை. அவள் உதவியால்தான் படித்தேன். அவளும் அவள் தந்தையும் எனக்கு எவ்வளவோ செய்துவிட்டனர். என்னால்தான் அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை."

மளமளவென்று வெளிவந்த அவள் சொற்கள் என்னவோ வெட்டுக் காயத்திலிருந்து குபுகுபுவென்று பொங்கும் இரத்தம் போல என்னைக் கலக்கின.

"உங்களுக்குள் அப்படி என்ன பிணக்கு வந்துவிட்டது?"

"நான் அதைச் சொல்லி நீங்கள் அவளைக் குறைத்து மதிப்பிட வேண்டாமே."

"நான் எப்போதோ அதைச் செய்தாகிவிட்டது."

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் உங்களை வளைந்து கொடுக்கச் செய்திருக்கக் கூடாதுதான். கடைசியில் அவள்தானே தாழ்ந்து போய்விட்டாள்?"



எனக்கு வாய் அடைத்து விட்டது. என்னுடைய ஜீவநாதமே அந்த வார்த்தைகளில் ஒடுங்கிவிட்டது.

"தவறுதான், பார்வதி. என்னை அவளோடு பார்த்திருக்கிறீர்கள். என் நடத்தைக்கு நீங்களே சாட்சி. இதில் நானுந்தானே தாழ்ந்து போனேன்?"

அவள் மிரண்டு விட்டாள்.

"ஐயோ! என்மேல் கோபம் கொள்ளாதீர்கள். உங்கள் எண்ணம் திசை திரும்புகிறது. தயவு செய்து..."

"எனக்குக் கோபமே இல்லை, பார்வதி. உங்களுக்குச் சொல்ல உரிமையுண்டு. நான் மலைக் கோட்டையின்

படிப்பகம்

www.padippakam.com

மேல் உட்கார்ந்திருக்கிறேன். இப்போது இதன் கம்பீரம் எனக்குத் தெரிய நியாயமில்லை. கீழே இறங்கிச் சென்று தொலைவில் நின்று கொண்டு பார்க்க வேண்டும். அப்போது தான் இந்தக் கோட்டையின் கம்பீரமும் தெரியும்; இதன் முன்னே நான் ஒரு துரும்பு என்பதும் புரியும்.''

அவள் கண்கள் கலங்க, ''அவ்வளவுதானா?'' என்றாள்.

''நீங்கள் இந்த மலைக் கோட்டையைப் போலவே ஒரு கம்பீரமான பெண், பார்வதி.''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். இந்தக் கம்பீரத்திற்குள்ளேயும் ஒரு கர்ப்பக்கிருகம் இருக்கிறது,'' என்று கோபத்தோடு சொன்னாள்.

''அந்தக் கர்ப்பக்கிருகத்தில் யாரைப் பிரதிஷ்டை செய்திருக்கிறீர்கள், பார்வதி?''

''மோகினி உங்களை அப்படிப் பிரதிஷ்டை செய்திருகக வேண்டும், இல்லையா?''

''அவள் விஷயமே வேறு. அவளை நான் ஆரம்ப முதலே வெறுத்தேன். ஆனால் வெளிப்படையாய்க் காட்டிக் கொள்வதில் தயங்கி விட்டேன். பெருந்தன்மையோடு நடந்து கொள்வதாக எண்ணிப் பிழை செய்துவிட்டேன். சிறுமையை மன்னிப்பதிலும் சிறப்பைக் கௌரவிப்பதிலும் ஒருவன் பெருந் தன்மையோடு நடந்து கொள்ளலாம். நானோ, சிறுமையை வெறுத்தொதுக்குவதில் தயங்கிவிட்டேன். அது பெருந்தன்மையால்தானா? அந்தப் போர்வையில் சபலமும் விகார மயக்கமும் என்னை அப்படித் தயங்க வைத்திருக்கலாம். என்னவோ நான் இந்தச் சோதனையில் தோற்றுவிட்டேன். பொய்மை என்னை அதள பாதாளத்தில் தள்ளி மிதித்துவிட்டது. நான் கேவலமாகத் தாழ்ந்து போய் விட்டேன். எனக்கு வேண்டியதை யாசித்துப் பெறக் கூடத் தகுதியில்லாமல் நொறுங்கிப் போய் விட்டேன்.''

அவள் கண்கள் என்னை வெறித்தன. முகமெல்லாம் சிவந்து குழம்பிப்போய்விட்டது. அவள் பார்வையை கண்ணீர் திரையிட்டது. அப்படியும் வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்தக் கணத்தில் ஏதாவதோர் அற்புதம் நிகழக் கூடாதா என்று ஏங்கிப் போய் உட்கார்ந்திருந்தேன். அவள் மிக மெல்லிய குரலில், ''யாசிப்பது ஆண் பிள்ளைக்கு அழகல்ல, தெரியுமா?'' என்றாள். நான் ஒன்றும் சொல்லவில்லை. அவளும் எதிர் பார்க்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பின் அவள் எழுந்து விட்டாள். நான் அவளைத் தவிப்போடு பார்த்தேன்.

''நான் புறப்பட்டுவிட்டேன். நீங்களும் கீழே வாருங்கள்,'' என்றாள்.

மௌனமாக எழுந்து அவளோடு கீழிறங்கினேன். சற்று முன் பார்வதியை உயரத்திற்கு அழைத்தேன். சந்தோஷமாகப்

படிப்பகம்

www.padippakam.com

பின் தொடர்ந்தாள். இப்போது ஒவ்வொரு படியாகக் கீழே போய்க் கொண்டிருக்கிறேன். அவள் மௌனமாக நடக்கிறாள். இன்னும் சில நிமிஷங்களில் சம்பந்தமே இல்லாத ஜனத்திரளில் நாங்கள் கலந்து விடுவோம். வேறென்ன?

நான் அவளைப் பார்த்து, ''நீங்கள் என்றைக்கு ஊருக்குக் கிளம்புகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இன்று இரவே புறப்படுகிறேன். புறப்படுவதற்கு முன் உங்களைப் பார்த்து விடவேண்டும் என்று ஆசைப்பட்டேன். அது நிறைவேறி விட்டது. இங்கே நான் உங்களைப் பார்த்திருக்கா விட்டாலும் உங்கள் அறைக்கே வந்து பார்த்திருப்பேன். இங்கே நாம் பேசிக் கொண்டதை யெல்லாம் அங்கேயும் பேசியிருப்போம். இரண்டும் ஒன்றுதான்.''

''நாம் சந்தித்துக் கொண்டது சரிதான். நான் உங்களைப் பேச வைத்துப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இன்று பேசிக் கொண்டோம். ஆனால் எல்லாம் பேசி முடித்த பிறகு, பேசியிருக்கவே வேண்டாமே என்று தோன்றுகிறது,'' என்றேன். என் குரல் என் வசமிழந்து நொறுங்கியது. அவள் என்னைப் பார்த்துக் கலங்கினாள்.

''நீங்கள் எப்போது கிளம்புகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நாளைக்குக் கிளம்பலாம் என்றிருந்தேன்''

''இப்போது அதை மாற்றிக் கொள்ளப் போகிறீர்களா, என்ன? இல்லை, நாளைக்கே கிளம்புங்கள். நான் ஒன்று கேட்டு நீங்கள் செய்ததாக இருக்கட்டுமே,'' என்றாள்.

நாங்கள் மலைக்கோட்டையை விட்டுக் கீழிறங்கி நடந்து, தெப்பக்குளத்தைத் தாண்டி வந்து, மெயின்கார்டு கேட்டை அடைந்தோம். பார்வதியும் நானும் பிரியும் இடம் வந்து விட்டது.

இருவரும் சிறிது நேரம் வெறுமையில் உறைந்து போய் நின்றோம்.

பார்வதி என்னைப் பார்த்தாள். நீராய்க் கரைந்துருகிக் கொண்டிருந்த என்னை அவள் கண்கள் பருகின.

சில வினாடிகளில் அவள் தன்னைத் திரட்டிக் கொண்டவளாய், ''நான் போய் வருகிறேன்,'' என்றாள்.

நான் பேசாமல் நின்றேன்.

ஒரு காலத்தில் வலிமை மிக்க கதவுகளைக் கொண்டு தற்காப்பான கோட்டையாக விளங்கிய மெயின்கார்டுகேட், இன்று கதவுகளின் பயனின்றி, காப்பின்றி, முடிந்து போன சரித்திரத்தின் சின்னமாகத் திறந்து கிடக்கிறது. என் இதயமும் அதுபோலத்தான் திறந்து கிடக்கிறது. ஒரு சாம்ராஜ்யத்தின் வல்லமை மிக்க கோட்டை என்றெண்ணி அதன் உள்ளே சந்தோஷமாக நுழைந்தாள் பார்வதி. ஆனால், கோட்டை முழுதும் வெறும் கூளமாகி, புதர்களே புதர்களாய் மண்டிக் கிடக்க, கதவுகளின்றி,

படிப்பகம்

www.padippakam.com

காப்பின்றி, இளைப்பாற நிழலின்றி, களைப்புற்றால் அமர்வதற்குக்கூட ஓர் ஆசனமின்றி, அவசமுற்றுக் கிடப்பதைக் கண்டு, இதோ வெளியேறுகிறாள். இனி இக் கோட்டைக்குச் சுவடேது? பெயரேது?

"நான் போய் வருகிறேன்," என மீண்டும் சொல்லிவிட்டு, என் சம்மதத்திற்காகக்கூடக் காத்திருக்காமல் தன் திசையைத் தானே நிர்ணயிக்கத் தீர்மானித்தவளே போல் பார்வதி திரும்பி நடந்தாள்.

நான் பதைப்புடன், "பார்வதி!" என்று ஏங்கிப் போய்க் கூவினேன். அவள் நின்று திரும்பிப் பார்த்தாள்.

"உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும், பார்வதி," என்றேன்.

அவள் என்னருகே மீண்டும் வந்து நின்று கொண்டு என் முகத்தைத் தேடினாள்.

"சாக்கடை அருகேதான் நான் நடமாடினேன் என்றாலும், என் ஞாபகம் முழுதும் சந்தனக் காப்பிட்டுக் கொண்டு சந்திர மண்டலத்தில்தான் இக்கியப்பட்டுக் கிடந்தது, பார்வதி. என்னில் இதைச் சாத்தியமாக்கிய உங்களுக்கு......"

"இப்போதுதான் சொன்னீர்கள், 'எல்லாம் பேசிய பிறகு பேசியே இருக்க வேண்டாம்' என்று. மீண்டும் பேச்சுத் தானா? பேசிப் பேசியே எல்லாக் கணக்குகளையும் தீர்த்து விடப் போகிறீர்களா?"

நான் வாயடைத்துப் போனேன். சட்டென்று இரு கைகளையும் கூப்பி மௌனமாய் விடை கொடுத்தேன்.

அவள் அதிர்ந்து போனவளாய், கை கூப்பி வணங்கி விட்டுத் திரும்பி நடந்தாள்.

நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஏறு வெயிலில், கானல் நீரலையில், பார்வதி மெல்ல மெல்ல மிதந்து கரைந்து போனாள்.

புழுவாய் நெளியும் ஜனத்திரளின் இடிபாடுகளிடையே மூச்சைத் திணர வைக்கும் தனிமையின் அச்சுறுத்தலுக்காட்பட்டு மனம் பதறி, நாப் புலர, "அம்மா! உன் மடியில் முகம் புதைத்து நான் அழ வேண்டும். அது ஒன்றே இப்போது என் தவம்," என்று கூப்பிய கைகளோடு பெருகத் துடித்த கண்ணீரை அடக்கினேன்.

ஃ ஃ ஃ

ஆம். அறைக்குத் திரும்பிய கையோடு, அன்னம் தண்ணீர் ஆகாரம் பற்றிய நினைவின்றி, இயக்கமின்றி, மயக்கமின்றி, 'நான்' எனும் நாமம் மறந்து, 'ஏன்?' எனும் மூர்க்கம் தளர்ந்து, "அம்மா, உன் மடியில்..." என்னும் புள்ளியில் குவிந்து, கனன்று, ஒளிர்ந்து, திரண்டு, வளர்ந்து......

மறுநாள் காலை "சார், போஸ்ட்," என்னும் குரல் என் அறைக் கதவைத் தட்டியது.

எழுந்து சென்று கடிதத்தை வாங்கிக் கொண்டதும் நடுக்கத்தோடு பிரித்தேன். பார்வதி தான் எழுதியிருந்தாள்! சிலப்

படிப்பகம்

www.padippakam.com

பதிகாரத்தில் கானல் வரியிலி ருந்து ஒரு கவிதையை எடுத்து எழுதியிருந்தாள்! என் ஆருயிர்

### மாதவிக் கொடி

தன் பூந்தளிர் நகங்களால் என் மார்மேலும் தோள்மேலும் சுக மாகக் கீறியிருந்தாள்!

தம்முடைய தண்ணளியும்
தாமும் தம் மான்தேரும்
எம்மை நினையாது
விட்டாரோ விட்டகல்க;
அம்மென் இணர
அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை
நாம் மறக்க மாட்டோமால்.

பார்வதி.

"அம்மா!" என்னும் கேவலோடு நான் நிமிர்ந்த போது, சற்றும் எதிர்பாராத விதமாய் அறை வாசலில் பார்வதி நின்று கொண்டிருந்தாள்! கவலையோடு என்னை நோக்கியவள் "ஏன் இப்படி வாடிப்போய் விட்டீர்கள்? நேற்றிலிருந்தே நீங்களும் நோன்புதானா?" என்றாள். இவள் ஏன் பட்டினி கிடந்தாள்? பிள்ளைக்கு நோயென்றால் அன்னை பத்தியம் இருப்பாளே, அப்படியா?

"எதற்குக் கலங்குகிறீர்கள்? உங்கள் உணவையும் உணர்வையும் பகிர்ந்து கொள்வதற்குத் தான் வந்துவிட்டேனே. சரி, வாருங்கள். பசிக்கிறது. ஏதாவது வாங்கிக் கொடுங்கள். உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்," என்றாள். ○

## உயர்ந்த மொழி

ஒரு சமயம் வினோபாவைப் பேட்டி காண பக்திரிகையாளர்கள் அவருடைய ஆசிரமத்திற்குச் சென்றார்கள். வினோபா அன்போடு அவர்களை வரவேற்றார். அவர்கள் பேட்டிக்காக வந்திருப்பதை அறிந்ததும், "நல்லது. ஆனால் முதல் கேள்வியைக் கேட்கும் உரிமை எனக்கு வேண்டும்" என்றார். பத்திரிகையாளர்களுக்கு ஆச்சரியம், 'என்ன கேட்கப் போகிறார்?' என்று.

"எந்த மொழியில் உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்?" என்பதுதான் அவர் கேட்ட முதல் கேள்வி.

பாவே பன்மொழிப் பண்டிதர். ஆகவே எந்த மொழியில் பதில் அளிப்பது என்பதை அவருடைய முடிவுக்கே விட்டுவிட இசைந்தனர்.

அதன்படி வினோபா அவர்களைப் பார்த்து, "என் அபிப்பிராயத்தில் பதில் அளிப்பதற்கு மௌனமே சிறந்த மொழி எனக் கருதுகிறேன்," என்று சொல்லி அவர்களைத் திகைக்க வைத்தவராய் மௌனமாகிவிட்டார்.

## அறிவிப்பு!

—"தமிழுண்ணிகள்"—

கட்டுரைத் தொடர் அடுத்து வரும் இதழ்களில் தவறாமல் இடம் பெறும். மேலும் சில கனங்களும் கூடி வரும்.

—ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

காற்றின் நாயகன்

## இராம. கண்ணப்பன்

**பூ**மியின் நிரை கூடுவதுமில்லை; குறைவதுமில்லை ஒளியும் இருளும் போல அவரது வாழ்க்கை சம பாவனையிலே நடந்தது.

பள்ளத்தை அணுகியதும் வெள்ளத்தின் வேகம் அதிகரிப்பதைப் போன்று தனது வெற்றிகளுக்காக அவர் மகிழ்ந்தது அடக்கத்தின் விளக்கமாகவே இருந்தது.

'உறவு வரும்—ஒருநாள் பிரிவு வரும்
வரவு வரும்—வழியில் செலவும் வரும்'

என்பதை எதிர்பார்த்தே அவர் வாழ்ந்தார்.

இன்பத்தையும் துன்பத்தையும் அவர் சமமாகக் கொண்ட பாவனை—

அன்பையும் ஆதரவையும் அடைக்கலமாகக் கொண்ட அவரது வழிநடை—

இவற்றால் அவர் கண்ட, அனுபவித்த அனுபவங்கள்—

அவரது எழுத்துகளில் நீரோட்டமாகி நிலைத்த புகழை அவருக்கு விளைவித்துத் தந்தன.

ஆயிரமாயிரம் அனுபவங்கள் அவருக்கு மட்டும் எப்படிச் சாத்தியமாயின, கை வந்து கவிதைகளாயின என்பதை எண்ணி வியப்புறும் விமர்சகர்கள் அன்றும் இருந்தார்கள்; இன்றும் இருக்கிறார்கள்; நாளையும் இருப்பார்கள்.

கவியரசர் கண்ணதாசன் அவர்களின் வாழ்க்கையை ஆராய்வதற்கு எனது எழுத்துகள் ஆராய்ச்சியாளர்களுக்கு எவ்வளவு உதவும் என்பதை என்னால் கூற இயலாது. ஆனாலும் இது ஒரு அணுக்கத் தொண்டனின், மாணவனின் கடமை என்பதால் எழுதுகிறேன்.

கோடையும் குளிரும் மாறி மாறி வருவது போல் கவியரசரது ஐம்பது ஆண்டுகள் முடிந்தன

1976 ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்த வெள்ளைக் குயிலின் வரலாறு அவ்வளவு சுகமானதாக இல்லை.

விடியும் பொழுதில் ஒரு துக்கம்...
முடியும் பொழுதில் ஒரு ஏக்கம்...
எதற்காகத் துக்கம்? எதற்காக ஏக்கம்?

இதைச் சொல்லத் தெரியாமல் தடுமாறுவது எனது வெட்கம்!

படிப்பகம்

www.padippakam.com

தாமரை போன்ற அவரது முகம் என்றும் களை குன்றியதில்லை; ஆனால் அதற்குள் ஏதோ ஒன்று...

அன்பு ஒளிரும் கண்களில் அருள் சுரந்தவாறே இருக்கும்; ஆனால் அதற்குள் ஏதோ ஒன்று...

மருத்துவருக்கும் புரியாத மர்ம வியாதியைப் போல் அவரை ஏதோ ஒன்று...

உள்ளச் சோர்வா...?

இல்லை. அவர் சொல் வல்லன்!

'உடற் சோர்வா?'

'ஆம்' என்பார்.

உடல் சோர்ந்தால் உள்ளம் சோர்வுறுமே! உள்ளம் சோர்வுற்றால் சொல் தொய்வுறுமே!...

என்றுமே அவரது சொல் தொய்வுற்றது கிடையாது. குற்றாலத்துத் தேனருவி போல் அவரது சொற்கள் பளபளத்து ஆழ்ந்த பொருளோடு சிதறிக் கொண்டிருக்கும்.

அவரது தமிழ் கம்பனது தமிழ்!

வயதால் உடல் தளர்ந்தது என்றாலும் அவரது தமிழ் கனித் தமிழாக காய்வோரே உவக்கும் தமிழாக இருந்தது.

ஆனாலும் அவர்...

'நன்மையும் தீமையும் நம் வசமே!' என்று பாடிய கவிஞரா இவர்?

ஆயிரம் பேருக்கு அறிவுரை கூறி நம்பிக்கை விளக்குகளை ஏற்றி வைத்த ஞான தீபமா இது?

வாழ்க்கை என்றால் ஆயிரமிருக்கும்
வாசல் தோறும் வேதனை இருக்கும்
வந்த துன்பம் எது வென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம் இருந்தால்
இறுதிவரைக்கும் அமைதி இருக்கும்!

என உலக இயல்பை நளினமாக எடுத்தியம்பிய உள்ளத்தில் எந்த முள் பாய்ந்திருக்கிறது?

இப்படித்தான் மனதிற்குள் குமைய முடிந்ததே தவிர உண்மையைத் தெரிந்து கொள்ள கிஞ்சித்தேனும் இயலவில்லை.

அவரது மன சாட்சி மௌனத்தில் விளையாடியது.

ஆனால் உறவாடியவர்களுக்குத் தெரியாமலும் புரியாமலும் அது விளையாடியது.

மனைவியருக்கு நல்ல கணவனாக...
குழந்தைகளுக்கு நல்ல தந்தையாக...
உறவினருக்கு உதவுகிறவராக...
ஏழ்மை கண்ட இடத்து இரங்குகிறவராக...

படிப்பகம்

www.padippakam.com

வள்ளுவம் பாடுகின்ற நெறிப்படி அவர் ஒரு நல்ல இல்லறத் தலைவராகக் கடமைகளை ஆற்றி வந்தார்.

ஆனாலும் எதைத் தேடி அந்த 'அருளாளரின் மனது தவித்தது என்பதை யாராலும் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஊமையின் பரிபாஷை போலவே அவரது நடவடிக்கைகள் இருந்து வந்தன.

தமயனின் பிரிவு அந்தத் தம்பியை வருத்தியிருக்கக் கூடுமா?

ஒருவர் பின் ஒருவராக தனது நண்பர்கள் தன்னை விட்டுப் பிரிந்து போய் விட்டார்களே என்ற ஆற்றாமையின் விளைவால் எழுந்த மரண பயமாக இருக்குமோ?

அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்!

1980ஆம் ஆண்டு கவியரசரது பிறந்த நாள் விழா வரலாறு காணாத அளவில் கொண்டாடப்பட்டது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டு முழுக்க சிறப்பாகக் கொண்டாடப்பட்ட கவிஞரது பொன்விழா சென்னையில் மியூசிக் அகாடமியில், அன்றைய முதல்வர் எம் ஜி. ஆர் கலந்து கொள்ள, சிறப்பாக நடை பெற்று முடிந்தது.

அந்த வானம்பாடிக்கு அதுதான் கடைசி விழா என்று யாரும் நினைத்துப் பார்த்திருக்க முடியாது.

ஆனால் இறைவன்?...

அந்த ஆண்டில் இருந்தே அவரது உடல்நிலை சீர்கெடத் தொடங்கியது.

எழுதுவதைத் தவிர அனைத்தின் மீதும் அவரது ஈடுபாடு குறைந்தது.

காரை எடுத்துக் கொண்டு ஒரு தேசாந்திரி போல் ஊர் ஊராக, நகரம் நகரமாக அவர் வலம் வந்தார். சென்னையில் தங்கும் நாட்கள் குறுகின. இருக்கும் நாட்களில் திரைப்படங்களுக்கு எழுதினார்.

எதைத் தேடி அந்த அருளாளர் அலைந்து கொண்டிருக்கிறார் என்பதை உடன் சென்ற என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிய அவரது தேசாந்தரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கடைசியாக நாங்கள் கோவையில் இருந்து திரும்பி வந்தோம்.

ஏதோ ஒரு காரணத்தினால் அவர் வீட்டுக்குச் செல்லாமல் ஒரு ஹோட்டலில் சென்று தங்கினார்.

நோய்வாய்ப் பட்டார்.

அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். தனது மருத்துவரை அனுப்பி வைத்துப் பரிசீலிக்கச் செய்து, சென்னை மத்திய மருத்துவ மனையில் சேர்ப்பித்தார்.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி மது அருந்துவதையும்

படிப்பகம்

www.padippakam.com

புகை பிடிப்பதையும் நிறுத்தினார்.

அமெரிக்கா செல்வதற்கான அழைப்பு கவியரசருக்கு அங்கு தான் வந்தது.

நாற்பது தினங்கள் மருத்துவ மனையில் இருந்ததன் பிறகு இல்லம் திரும்பினார்.

''அண்ணன் 54ஆம் வயதில் இறந்து போனார். அப்பச்சி (அப்பா) சாந்தி செய்யாமலேயே இறந்து போனார்கள்! நான்... நான்!...'' தனிமையில் இருக்கும் போதெல்லாம் இவ்வாறே கவியரசர் கூறி வந்தார்.

சில சமயங்களில் இதுதான் கவிஞரைப் படுத்தி வைக்கிறதோ என்று கூட நான் எண்ணியதுண்டு.

கலைமகளின். கைப் பொருளைக் கவனிக்க...
''மானிட இனத்தை ஆட்டிவைப்பேன்—அவர்
மாண்டு விட்டால் அதைப் பாடிவைப்பேன்!''

என்று, கவிதைப் பெருமையை உயர்த்தி வைத்த கவிஞர்,

நான்—
நிரந்தரமானவன் முடிவதில்லை—எந்த
நிலையிலும் எனக்கு மரணமில்லை.

என்று பாடின காற்றின் நாயகன்,

தனது 53ஆம் பிறந்த நாளை எவ்வித ஆடம்பரமுமின்றி மிகமிக எளிமையாகக் கொண்டாடி முடித்தார்.

பத்து ஆண்டுகள் பம்பரம் போல் சுழன்று விட்டது.

ஒவ்வோராண்டும் ஜூன் மாதம் 24ஆம் தேதி கவியரசரின் இல்லத்துக்குச் செல்லும் போதெல்லாம்,

அவரை மட்டுமல்ல; வேறு எதையோ தேடி என் மனது அழுகிறது. அது என்ன என்று இன்று வரை எனக்குப் புரியவில்லை.

—வளரும்.

---

## சாதனையாளர்

*பள்ளிப் பருவத்திலேயே, என் தந்தையார் விட்டுச் சென்ற பெரும்பாலான சங்க இலக்கியங்கள் எனக்குப் பரிச்சயமாகிவிட்டன. அவற்றுள் சிலப்பதிகாரம் சற்று அதிகப்படியாக என்னைக் கவர்ந்த ஒன்று. அவ்வளவே. மேலும் ஓர் ஐந்தாண்டுகள் கழிந்த பின்னர், அண்மையில் காலம் சென்ற செந்தமிழ் வித்தகர் புலியூர் கேசிகன் அவர்களின் தெளிவுரையுடன் கூடிய சிலப்பதிகாரப் பதிப்பைச் சுவைக்க நேர்ந்த போது, அதன் தெளிவும் எளிமையும் ஓர் சொந்தத்தை வளர்த்து, 'தெய்வம் தெளிமின்' என்னும் ஆய்வு நூலையே எழுத வைத்தன. சங்க இலக்கியங்களைச் சாமான்யர்களும் சுவைக்கும் பதத்தில் சந்தைக்குக் கொண்டு வந்த சாதனையாளர் அவர்.*

படிப்பகம்

www.padippakam.com

**பரணிதாசன்**

# விரக்தி

லேசாய் விடியத் தொடங்கிற்று. இரவு விடைபெற, பகல் வரத் தொடங்கிற்று. உறங்கிக் கிடந்த பிரச்சினைகளும் விழித்துக் கொண்டன. விழிக்கும்போதே மன உளைச்சலோடுதான் விழிக்க வேண்டியிருக்கிறது; எந்திர கதியாய் இயங்க வேண்டியிருக்கிறது. எந்திரங்களுக்குக்கூட எட்டு மணி நேர வேலைதான். மனிதனுக்கு உறக்கம்தான் ஓய்வு என்றால், ஏனோ அந்த ஓய்விலும்கூட கனவுகளும் சிந்தனைகளும் தொடர்ந்து வந்து மனதை உளைச்சல் கொள்ளச் செய்கின்றன.

சென்னைக்கு வந்து எட்டு மாத காலம் ஆயிற்று. விருப்பப்பட்டு வரவில்லை. வேண்டா வெறுப்பாகத்தான் குடி பெயர நேர்ந்தது. ஆபீஸ் பிராஞ்ச் மேனேஜர் மாற்றல் உத்தரவை கையில் கொடுக்கும்போது ரவிகுமார் விருப்பமின்றித்தான் வாங்கினான்.

"என்ன ரவிகுமார்? சொந்த ஊர் விட்டு மெட்ராஸுக்கு மாத்திடறமேன்னு வருத்தமா இருக்கா? டோண்ட் வொர்ரி! திரும்ப இங்க வேகன்ட் ஆகும்போது ட்ரான்ஸ்பர் வந்துடும். இப்ப போங்க. பி ஹேப்பி." முக மாற்றத்தைக் கண்டு மேனேஜர் சொன்னபோது,

"நோ சார். நோ, நோ அதெல்லாம் ஒன்னுமில்லை," என்று பதில் சொல்லிச் சமாளித்துவிட்டு வீட்டிற்கு வந்து பவானியிடம் சொன்னபோது அவளும்கூட அதிர்ந்தாள்.

"எப்படிங்க... ஊர்விட்டு ஊர் போய்... பழகினவுங்க யாரும் இல்லாம, கைக்குழந்தைய வேற வச்சிக்கிட்டு... ப்ச்.." சலிப்புற்றாள்; பயந்தாள்.



அவளைத் தேற்றி, முன்பே வந்து, வீடு பார்த்து வேன் பேசி, சாமான்கள் ஏற்றி, சென்னை வந்துசேர்ந்து எட்டு மாதங்களாயின. இந்த எட்டு மாதங்களாய்த்தான் வாழ்வின் பிரச்சினைகள் புலப்படத் தொடங்கின. 'இதுதான் வாழ்க்கையா?' என்று கேள்வி வந்தது.

வந்த மறுநாள், "குழந்தைக்குப் பால் வேணும். யாராவது கொண்டு வந்து தருவாங்களா?" என்று பக்கத்துப் போர்ஷனில் கேட்டபோது, "கொண்டாந்து தர்றதா!... ம் ஹூம். பக்கத்துலதான் பால் பூத் இருக்கு. போய் வாங்கிக்க வேண்டியதுதான்," என்று பதில் வந்தது.

"எத்தனை மணிக்குப் போவணும்?"

படிப்பகம்

www.padippakam.com

"காலைல நாலு மணிக்கு; மத்தியானம்ரெண்டுமணிக்கு." அவர்கள் சொன்ன போது பவானிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"காலைல நாலு மணிக்கா!" வாய் பிளந்தாள். "சரி, சரி. வாயை மூடு. மத்தியானத்துல நீ போய் வாங்கிக்க. காலைல நான் போய் வாங்கித் தர்றேன்," என்று அவளைச் சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று. மறுநாள் காலை நான்கு மணிக்கு அங்கு போன போது, இருநூறு— இருநூற்றைம்பது பேர் கொண்ட கியூ இருந்தது. தானும் வரிசையில் நின்று பால் வாங்கி வர இரண்டு மணி நேரம் ஆனது. வந்தவுடன் ஆஃபீஸ் கிளம்ப அவசரப்பட வேண்டியதாயிற்று. இந்த எட்டு மாதத்தில் இது பழகிப் போய்விட்டது.

பாலுக்கு கியூவில் நின்று பழக்கமில்லைதான். ரேஷன் கடையில் சில நாட்கள் நின்றதுண்டு. வறட்சிக் காலங்களில் குடி நீருக்கு சில நாட்கள் கியூவில் நின்றதுண்டு. சின்ன வயதில் சினிமா தியேட்டரில் சில நாட்களில் கியூவில் நின்றதுண்டு. ஆனால் பாலுக்கு இதுவரை கியூவில் நின்றதில்லை. ஆனால் இங்கு, இந்தப் பெரிய நகரத்தில் நிற்க வேண்டியதாயிருக்கிறது. ஒன்றிரண்டு நாட்களில்லை; தினமும். தினம் தினம் கால் கடுக்க நிற்க வேண்டியிருக்கிறது. நாலு மணி என்றால் மூன்றரை மணிக்கே எழுந்து ஓட வேண்டியிருக்கிறது. தூக்கம் கெடுகிறது. உடல் அசதி கொள்கிறது. மனம் விரக்தி கொள்கிறது. ஏன்? எதற்கு? இப்படி கஷ்டப்பட்டு பால் வாங்கி காபி குடிக்கனுமா? தேவையில்லையே. காபியை நிறுத்திடலாமே! காசும் மிச்சம். உடல் அசதி மிச்சம். தூக்கம் கெடத் தேவையில்லை. யோசனை வந்தபோது குழந்தை மீண்டும் குறுக்கிட்டான்.

"வேண்டாங்க, நாம நிறுத்திடலாம். குழந்தைக்கு நிறுத்திட முடியுமா? பிஞ்சு வாட வேண்டாங்க," என்று பவானி கெஞ்சலாய்ச் சொன்னபோது மனம் குழந்தையின்பால் இரக்கம் கொண்டது. தூக்கமும் அசதியும் மறந்து போயின.

இன்று வெள்ளிக்கிழமை. வீடு கழுவி குளிக்கச் சொல்ல பவானியையும் உடன் எழுப்பினான்.



"பவானி...பவானி.."

"ம்..."

குழந்தையின் வாயிலிருந்த மார்புக் காம்பை விலக்கி, ஜாக்கெட் கொக்கி போட்டு அவள் எழ, குழந்தை அழத் தொடங்கிற்று.

படிப்பகம்

www.padippakam.com

"அழு மகனே, அழு. பழகிக் கொள். இவ்வுலகில் அழவும் அழுகை மறந்து சிரிக்கவும், சிரிப்பை மறந்து மீண்டும் அழவும் பழகிக்கொள். எதிர்காலம் நினைத்து நிகழ்காலம் மறந்திட பழகிக்கொள். வாழ்வு சுலபமில்லை. மிகக் கடினம். நானே இப்போதுதான் படிக்கத் தொடங்கியிருக்கிறேன். நான் படித்து புரிந்து கொண்டு உனக்குக் கற்பிக்கிறேன். என்னால் அழ முடியவில்லை. நீ அழுகிறாய். என்னால் சிரிக்கவும் முடிவதில்லை. நீ சிரிக்கிறாய். அழவும் சிரிக்கவும் இதுதான் பருவம். அழு. அழுது ஓய்ந்து சிரி. சிரித்த பின் மீண்டும் அழு. இதுதான் வாழ்க்கை."

தேவையின் றி மனம் விரக்தி கொள்கிறது. சின்ன விஷயத்திற்காக அதிகமாய்ச் சிந்திப்பதாய்த் தோன்றிற்று. எழுந்து வெளியில் வந்து வானம் பார்த்தான். வானம் மேகம் சூழ்ந்திருந்தது. இளங்காற்று வீசிற்று. மன உலைச்சலிலும் சூழ்நிலை சின்ன குளிர்ச்சி தந்தது. திரும்ப உள்ளே சென்றான். குழந்தை அழுகை நிறுத்தி லேசாய் சிரித்தது. மனத்தின் ஏதோ ஓர் மூலையில் சின்னதாய் ஒரு தீபம் சுடர்விட கையில் பாத்திரத்தோடு பால் பூத் நோக்கி நடந்தான். ○

## இதுதான் அரசியல்

ஐ. நா. சபையிலேயே 'இந்திய நாய்களோடு ஆயிரங் காலத்துப் போர்' தொடுக்கப் போவதாக நாக் கொழுப்போடு பேசியவர் புட்டோ அவர்கள். பேசியது 1965ஆம் ஆண்டு இந்திய - பாகிஸ்தான் போரின் போது. அடுத்து, 1971ஆம் ஆண்டு பாகிஸ்தான் பங்களா தேஷை இழந்து, 93 ஆயிரம் பாகிஸ்தான் வீரர்கள் போர்க் கைதிகளாகச் சரணடைந்திருந்த போது, சிம்லாவில் புட்டோ இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசினார். பேச்சு வார்த்தை திருப்தியாக முடிந்தது. அதன்படி, போர்க் கைதிகள் விடுவிக்கப் பட்டனர். அதைவிட முக்கியமாக, புட்டோவின் காதலி — இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான, டாக்கா வியாபாரியின் மனைவியாயிருந்து, புட்டோவுக்காக விவாக ரத்து பெற்று, பங்களா தேஷிலேயே சிக்கிக் கொண்டுவிட்ட ஹஸ்னா ஷேக் என்னும் பெண்மணி, இந்திரா காந்தியின் உதவியால் ராவல்பிண்டிக்கு அனுப்பி வைக்கப் பட்டார். போர்க் கைதிகளை விடவும் இந்தக் கைதியின் விடுதலைதான் புட்டோவை இந்திராவிடம் பேச இணங்க வைத்திருக்கலாம். யார் கண்டது!

படிப்பகம்

www.padippakam.com

பொள்ளாச்சி நசன்

# உயர... உயர...

காலையில் விழித்தது முதல் இரவு உறங்கச் செல்லும் வரை, ஒவ்வொரு மனிதனும் ஏதாவது 'ஒரு வேலையை' இடைவிடாது செய்து கொண்டேயிருக்கிறான்.

நகரின் ஒரு பகுதியில் அமர்ந்து பார்த்தால் ஒவ்வொருவரும் இயந்திர கதியில் ஓடிக்கொண்டிருப்பது தெரியவரும். இலக்கு நோக்கியும், இலக்கின்றியும் அவர்கள் சுழன்று கொண்டேயிருக்கிறார்கள். இவர்களின் சுழற்சி சில சமயங்களில் பயனுள்ளதாகவும், பல சமயங்களில் பயனற்றதாகவும் முடிவடைகின்றது. ஒன்றை முடிக்க வேண்டும், முடிக்க வேண்டும் என்று ஓடி, ஓடி—அது முடிந்த அடுத்த நொடியில்-அடுத்த எண்ணத்தோடு தொடங்கி, மீண்டும் ஓடி—இப்படி முடிவில்லா "ஓட்டப் பயணமாக" வாழ்க்கை அமைகின்றது. இந்த ஓட்டத்திற்குள் சிக்காத மனிதர்களே கிடையாது.

இப்படி ஓடி, ஓடி—சலித்து, இறுதியில் இதுதான் வாழ்க்கை என்று தம்மைச் சமாதானப் படுத்திக்கொண்டு வாழ்பவர்கள் ஏராளம். பல காரணங்களை வரிசைப் படுத்தி, தாம் உயராததற்குக் காரணம் காட்டி, தம்மைச் சமாதானப் படுத்தி, இருப்பதிலேயே நிறைவு கண்டு வாழ்பவர்கள்தான் பெரும்பாலானவர்கள்.

இப்படி வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களின் இந்த 'ஓட்டப்பயணம்' இவர்களை உயர்த்துமா?

எல்லோரும் இடைவிடாது வேலை செய்த போதும் மிகச் சிலரே உயருவதன் காரணம் என்ன?

அவர்கள் செய்யும் வேலைகள் எத்தன்மையன?

செய்யும் அனைத்து வேலைகளையும் பொதுவாக 'வழக்கமான வேலை,' 'உயர்விற்கான வேலை' என இருவகைப் படுத்தலாம். உணவு, உடை, உறையுள் என்று அத்தியாவசிய, தினசரி வேலைகளை, 'வழக்கமான வேலை' எனவும், உணவு, உடை, உறையுள் ஆகியவற்றின் தரம், தன்மை, நிலைப்பு, பற்றித் தோன்றும் வேலைகளை 'உயர்விற்கான வேலை' எனவும் இருவகைப் படுத்தலாம். உயர்விற்கான வேலையில் 'முளைச் செறிவேற்றுதலும்' —சமுதாய முதன்மைப் படுத்துதலும் அடங்கும்

எல்லா மனிதர்களும் இடைவிடாது, தொடர்ச்சியாக ஏதாவது செய்து கொண்டே யிருக்கின்றனர். அவர்களின்

படிப்பகம்

www.padippakam.com

செயல்கள் பெரும்பாலும் வழக்கமான வேலைகளுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன ஆரம்பக் கட்டத்தில் உயர்வுக்கான வேலையில் நாட்டம் இருந்த போதும், வெகு சீக்கிரத்தில் வழக்கமான வேலைகளுக்கே தம்மை இணைத்துக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். சமுதாயச் சூழல் அவர்களை வழக்கமான வேலைகளுக்கே வழிகாட்டுகிறது. "பாம்புக்கறி தின்கிற ஊரில் நடுக்கண்டம் நம்ம கண்டம்," என்று சொல்லும் நிலைக்குத் தள்ளப் படுகிறார்கள்.

உண்பது, உடுப்பது, சாப்பாட்டிற்கான வேலை செய்வது, படிப்பது, உறங்குவது போன்ற வழக்கமான வேலைகள் அவர்களால் முழு நேரமும் செய்யப்படுகின்றன. இந்த வேலையில் சோர்வடைந்த பொழுது, 'பொழுது போக்குவது' என்று செயல்படுகிறார்கள். தற்பொழுதோ இந்த நிலை வெகுவாக மாறி, 'பொழுது போக்கையே' முழு நேர வேலையாகப் பலரும் விரும்பி ஏற்றுக் கொள்கிறார்கள். இச் சூழலில் இவர்களின் உயர்விற்கான வேலை செய்யும் நேரத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் அது மிகக் குறைவே.

சாதாரண மனிதன் 90 % வழக்கமான வேலைக்கும், 10 % உயர்விற்கான வேலைக்கும் ஒதுக்குகிறான். தன் வாழ்நாளுக்குள் ஓரளவு உயர்ந்த மனிதன் 60 % வழக்கமான வேலைக்கும், 40 % உயர்விற்கான வேலைக்கும் ஒதுக்குகிறான். தன் வாழ்நாளுக்குள் மிகப் பெரிய மாற்றத்தோடு உயர்ந்த மனிதன் 40 % வழக்கமான வேலைக்கும், 60 % உயர்விற்கான வேலைக்கும் ஒதுக்குகிறான். 10 % வழக்கமான வேலைக்கும், 90 % உயர்விற்கான வேலைக்கும் ஒதுக்கியவர்கள் சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்று பாராட்டுப் பெறுகிறார்கள்.

இந்தச் சாதனையாளர்களின் எண்ணம், செயல் இரண்டும் ஒருமுகப் படுத்தப்பட்டு, உயர்விற்கான வழியிலேயே செயற்படுத்தப் படுகின்றன. இந்தச் செயற்படுதல் கூட உயர்ந்த இலக்கு நோக்கியதாக இருக்குமாயின், அவர்கள் பெற்ற சிறப்புத் தன்மை வெகு காலத்திற்கு நிலைத்து நிற்கிறது. அப்படியில்லாமல் வெகு சாதாரணமான, நீர்த்துப்போன, இலக்குடையதாக இருக்குமாயின் அது பூர்த்தியான பின், அச்சிறப்புத் தன்மை திடீரெனச் சரிந்துவிடுகிறது.

வழக்கமான வேலையைச் சிறப்பாகச் செய்பவர்கள் 'வாழும் போது மட்டும்' வாழ்கிறார்கள். உயர்விற்கான வேலையைச் சிறப்பாகச் செய்பவர்கள் இறந்தும் வாழ்கிறார்கள்.

எனவே வழக்கமான வேலைக்கே தன் முழு நேரத்தையும் செயற்படுத்தும் பெரும்பாலான தமிழ் நாட்டு மக்கள் யோசிப்பார்களா? ○

படிப்பகம்

www.padippakam.com

முத்துதாசன்

# யோகம்

நீள்திரையின் ஓரத்திலே
நெஞ்சம்சுக வாசத்திலே
நான்சிரித்த காலமெங்கோ போச்சு-அந்த
நாளையெண்ணிப் பார்க்கப்பெரு மூச்சு.

ஊழ்வினையி னாலொருத்தி
ஊன்மடியி லேயிருத்தி
ஆனமட்டும் சஞ்சலத்தைத் தந்தாள்-எனை
ஆடும்வரை ஆடவிட்டுச் சென்றாள்.

வாள்விழியின் வீச்சினிலே
வெண்ணிலவின் காய்ச்சலிலே
வாடைகொண்ட மேனியொடு கொஞ்சல்-நீல
வான்தொட்டுப் பூமிவரை கெஞ்சல்.



பாழ்வெளியி லேவிழுத்திப்
பாதிதனி லேஅழுத்திப்
பாட்டதனில் சோகந்தந்த பெண்ணாள்-தன்
பார்வையிலே ஆலந்தந்த கண்ணாள்.

நாள்கடந்து போனதுவும்
நாடகமாய் ஆனதுவும்
ஞாபகத்தில் நிற்பதுதான் மிச்சம்-இந்த
நானிலத்தில் நானுமொரு எச்சம்.

ஏழ்பிறப்பு என்றிருந்தால்
என்பிறப்பை இத்துடனே
ஏறுகட்டி நீங்கவைப்பாய் இறைவா-இனி
எந்தனுயிர் உன்பதத்தில் தலைவா.

ஆள்என நான் இங்குவந்து
ஆனமட்டும் பட்டுவிட்டேன்
ஆரையின்றி வாழவழி காட்டு-இல்லை
இன்றெனக்குத் தந்துவிடு சீட்டு.

வீழ்ந்திருக்கும் என்னுடலம்
விறகுடனே சேர்கையிலே
வஞ்சமிலான் என்றுரைத்தால் போதும்-அது
வாழ்வினிலே நான் புரிந்த யோகம்...!

படிப்பகம்

www.padippakam.com

## நா. விச்வநாதன்

### அவ்வாறெனில்

கொன்று விடலாம்தான்—
மனித உரிமைக் கழகத்திற்குப் போய்
பிரச்சினை
சந்தி சிரிக்குமென்ற பயமா?
அவர்களோ நான்கைந்து பேர்;
உன் பக்கமோ கோடி ஜனங்கள்:
கவலை யில்லாமல் காரிய மாற்றலாம்—
பக்கத்து வீட்டு கண்ணாடி ஜன்னலை
அழகாயிருந்தால்
உடைத்துப் போடலாம்—
கிணற்றடியில் குளிப்பவர்
யாராயிருந்தாலும்
உடம்பில் உஷ்ணத்தை
ஏற்றிக் கொள்ளலாம்—
கோயில் மணியை
இரண்டுமுறை அடித்துவிட்டு
அடுத்த ஜென்மத்திற்கு
அச்சாரம் வைக்கலாம்—
பசிக்குதென்றால்
சுதந்திரத்தைக் கூட
சுட்டுத் தின்னலாம்—



### மௌனம்

சோனிக் குழந்தை இதென்று
சொல்லிச் சோறூட்டிய
எங்கம்மா—
சோற்றுக்குத் தண்டமென்று
சொல்லம்புகள் தொடுத்து
சொந்தம் மறுத்துச் சொன்ன
எங்கப்பா—
உனக்கு நீ எனக்கு நானென்று
உயிர்ப் பாடம் ஒப்புவித்து
ஓடிப் போன அவள்—

படிப்பகம்

www.padippakam.com

இந்த சொந்தம் மறுத்தலுக்கும்
தேவையற்ற இரக்கத்திற்கும்
புறக்கணித்தலுக்கும்
என் மௌனமே காரணமென்று
புரிந்தும்,
அதைக் கலைக்க மனமில்லா நான்—

**பசி**

ரோஜாப்பூ சிரிக்கும்.
எங்கெங் கெங்கும்
வானத்துப் புள்ளிகள்
சொல்லும் கதைகளும் கோடி-
அலைகள் ஆயிரமாய்
மேலெழும்பிக் கூறும்
சேதிகளும் சுகம்தான்.
சாமி பிரகாரத்தில்
மருண்டு விழிக்கும்
கண்கள் சொல்லும்
கேள்விக் கெல்லாம்
ராத்திரிச் சொப்பனத்தில்
பதில் கிடைக்கும்.
வெள்ளைக் குதிரைகளும்
இன்னும் வருணிப்புக்கு
உள் வாரா
சித்திரப் புதுமைகளும்
நிமிஷத்திற் கொன்றாய்
நிறங் காட்டும்.



ஆட்சியாளர்களும்
அபத்தத்தை
ஆணைகளாய்த் துப்பும்
அற்புதமோ மாளாது.
அகிலம் நெடுகிலுமே
அழகின் சிரிப்புதான்.
ஆனால்,
அடிவயிற்றைத் தடவி
அதென்ன அபசுரமாய்
அங்கென்ன அழுகை?

படிப்பகம்

www.padippakam.com

## சோம்பல் மனிதனே!



கண்ணுண்டு வனப்பைக் காண!
கருத்துண்டு தடைகள் நீக்க!
பண்ணுண்டு கசிந்து பாட!
பயனுண்டு வியர்வை சிந்த!
மண்ணுண்டு நிமிர்ந்து நிற்க!
வகையுண்டு மகிழ்ந்து வாழ!
விண்ணுண்டு விந்தை செய்ய!
மிகச்சோம்பிக் கிடக்க லாமோ

இம்மண்ணில் என்ன இல்லை?
எதற்கடா சவம்போ லானாய்?
எம்மண்ணும் வளமை கொள்ளும்
இருகைகள் போது மேடா!
அம்மெனும் முன்னே கண்ணை
அகலமாய் விரித்துப் பாராய்!
'கம்'மென்று கிடந்து விட்டால்
கடுகும் ஓர் மலையாமேடா!

-கருமலைப் பழம் நீ

## சனி



வெள்ளிக் கிழமையா இன்று?
எண்ணெயாகப் பிறக்கவில்லை என
ஏக்கம் தொடர—
நீராடித் திலகமிட்டுப் பளபளக்கும்
பட்டுக் கூந்தலுடன்
உனைக் கண்டால்,
வெள்ளி முளைத்து வந்ததுபோல்
நினைவலைகள் அலைக்கழிக்கும்.
முப்பது நாட்களா மோகம்?
அறுபது நாட்களா ஆசை?
அறிவு கெட்டவளே!
நீயும், உன் தலையும்,
முட்டைக் கண்ணும், மூஞ்சியும்,
ஓடிப் போ எங்காவது.
வெள்ளிக்குப் பிறகு
'சனி'தான் என்பதில்
சந்தேகம் ஏதாம்!

ஜூனியர் தேஜ்

படிப்பகம்

www.padippakam.com

## புதுவை இளவேனில்

### மறந்து போய்...

இந்தப் பிரபஞ்சத்தில்
மலையாயினும், மரமாயினும்,
புல்லாயினும், பூவாயினும்,
புழுவாயினும், பூச்சியாயினும்,
காற்றாயினும், கடலாயினும்,
பறவையாயினும்,
விலங்காயினும்,
நம்முடன்தான் நலமாய்...
நாம்தான் இவர்களிடத்தில்
மனித நேயம்
மறந்து போய்...

O

## அனாமிகன்

### மீண்டும் மீண்டும்

இன்றும் அப்படித்தான்—
காலையில் எழுந்து,
சுறுசுறுப்பாய்க் குளித்து,
டிபன் காபி
கசப்பு நாக்கிலிருக்க—
கூடவே ஒரு சிகரெட்;
அலுவலகம்.
With reference to your
letter...
தட் தட் தட்
சீக்கிரம் கிளம்பணும்:
ஐயய்யோ லேட்டாயிருச்சே!
என்ன ரஷ், என்ன ரஷ்!
கைகால் கழுவி,
சாப்பிட்டுப் படுத்து,
நாளையேனும்...

## மாற்று

வட்டம்.
எங்கும் வட்டம்.
சிறிதாய், பெரிதாய்,
ஊரெங்கும் வட்டங்கள்,
சிரித்துக் கொண்டு,
உம்மென்று...
ஒரு வட்டத்துள் இருப்பவன்
இன்னொரு வட்டத்தைப்
பழிக்கலாம்;
கோபம் கொண்டு
தன் வட்டத்தையும்
பழிக்கலாம்;
பரவாயில்லை.
ஆனால் ஒன்று,
வட்டத்தை அழித்தால்
வருவது
வட்டமே
அன்றி வேறில்லை.

## பார்வை

தரையில் படுத்து
வெளிச்சம் தழுவிய
சுவரைப் பார்த்தேன்,
கையை குவித்துக் கொண்டு-
அதன் ஊடே.
சிறிதாய்ச் சுவர் மட்டுமல்லாது
சின்னச் சின்ன மேடுபள்ளம்
சுவரெங்கும்.
கையை எடுத்துவிட்டு
வழக்கம் போல்
சொல்லிக் கொண்டேன்.
பார்வைக்கு வெளியேயும்
காட்சிகள் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com

அன்பாதவன்

# மேகங்கள்

இடம்: ஒரு நடுத்தர வர்க்க வீடு.
பாத்திரங்கள்: மாமியார், மருமகள் சுசிலா, அலுவலக நண்பர்.
நேரம்: காலை நேரம்.

(நாற்காலியில் அமர்ந்தபடி சுசிலா படித்துக் கொண்டிருக்கிறாள். அவளது மாமியார் கையில் பையுடன் உள்ளே நுழைகிறாள்.)

*மாமியார்:* ஸ்...ஸ்...அப்பாடி...

*சுசிலா:* (திடுக்கிட்டு நிமிர்ந்தவளாக) வாங்க அத்தை. வாங்க வாங்க.

*மாமி:* வரம்மா. எங்க அவன் இன்னும் ஆபீஸ் வுட்டு வர்லயா?

*சுசி:* இல்லீங்க அத்த. வர்ற நேரந்தான்.

*மாமி:* என்னம்மா, போன தடவ பாத்ததவிட எளச்சாப்ல இருக்கிய. டாக்டர் கிட்ட காமிச்சயா?

*சுசி:* அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க, அத்த. நான் நல்லாத்தான் இருக்கன். ஊர்ல எல்லாரும் சவுக்கியந்தானா? நீங்கதான் கொஞ்சம் எளச்ச மாதிரி இருக்கீங்க.

*மாமி:* எனக்கென்னம்மா. பேத்திங்க கூடவே பொழுது போயிடுது. எல்லாரும் அங்க நல்லாத்தான் இருக்காங்க. இந்த சின்னவ இருக்கா பாரு, அவ கூடத்தான் தொந்தரவு தாங்கல. எதுக்கெடுத்தாலும் எதுத்தெதுத்துப் பேசிக்கிட்டு. ப்பா என்னமா வாயாடுறா அவ.

*சுசி:* பெரியவளுக்கு ரிசல்ட் வந்திடுச்சா?

*மாமி:* அடுத்த வாரம்தான் வருதாம். அவளுக்கின்னா, அவ பாஸாயிடுவா. ஹ்ம். என்னமோ, நீதான் ஒரு பேரன பெத்து கைல குடுக்க மாட்டன்ற.

*சுசி:* அதுக்கென்னங்க அத்த. உங்க ஆசீர்வாதம். இன்னுங் கொஞ்ச நாள் பொறுங்க.

*மாமி:* அடி சக்க! இத மொதல்லயே சொல்றதுக்கின்னா.

*சுசி:* இன்னும் டாக்டர் கன்ஃபர்ம் பண்ணி சொல்லல. ரெண்டு நாள் கழிச்சி வரச் சொல்லியிருக்காங்க. காபி கொண்டு வரட்டுங்களா அத்த?

*மாமி:* ஆமாம்மா. காப்பி வேணுந்தா(ன்). தலய பொளக்குது. நீ ஒக்காரும்மா. இந்தப் பைல இருக்கிறதெல்லாம் எடுத்து வையி. நான் காப்பி போட்டுக்கிறன்.

(சமையலறைக்குள் போகிறாள். உள்ளிருந்த படியே)

*மாமி:* என்ன வீடுடா இது. காப்பித்தூள்கூட இல்ல. ச்சே. (வெளியே வந்தபடி) ஏம்மா, சுசிலா. காப்பித்தூள் இல்லையே. நான் வர்றது தெரியுமில்ல? வாங்கி வச்சிருக்கக் கூடாது?

*சுசு:* அய்யய்யோ. அவருகிட்ட நேத்திக்கே வாங்கிட்டு வரச் சொன்ன(ன்). மறந்துட்டார்

படிப்பகம்

www.padippakam.com

போல..

*மாமி:* க்கும்...அவ(ன்) ஒரு ஒத வாக்கரை... அவங்கிட்டப் போய் சொன்னியா? அம்மா வர்றாளேன்னு அவனுக்கும் அக்கறை கெடயாது. மாமி யார் வர்றாளேன்னு ஒனக்கும் பொறுப்பு கெடயாது.

*சுசி:* கொஞ்சம் பொறுத்துக் குங்க அத்த. அவரு வந்த உடனே போயி, கடேய்ல வாங்கிட்டு வரச்சொல்றேன். அதுக்குள்ள கொஞ்சம் டீ வேணும்னா போட்டுத் தரட் டுமா?

*மாமி:* ஆமாண்டியம்மா. எனக்கு டீ புடிக்காதுன்னு தெரிஞ்சும் வேணும்னே கேக்கு றியே. எனக்குன்னு இப்படி தெண்டத்துக்கு ஒரு மகன், அதுக்கு மேல மருமக.

*சுசி:* அத்த, அவுரு உங்க புள் ளையா இருக்கலாம். அவுரு வந்தா நேர்ல திட்டுங்க. எம் புருஷன என் எதிர்லயே தயவு செஞ்சி திட்டாதீங்க.

*மாமி:* ஆமாம்மா. அவன நா பத்து மாசம் சொமந்து பெத்து வளத்து ஆளாக்கி கல்யாணம் பண்ணி வச்சா, ஆள மயக்கி கைக்குள்ள போட்டுக்குவிங்க. இந்தக் காலத்துப் பொண் ணுங்களப்பத்தி எனக்குத் தெரி யாதா?

*சுசி:* ஒங்க பொண்ண வச்சி ஊர் பொண்ணுங்கள எடப் போடாதீங்க. கல்யாணம் பண் ணிகிட்டு வந்துட்டா காலத் துக்கும் உங்களுக்கு அடிமையா இருக்கணுமா? சும்மா மயக் கிட்டா, அது இதுன்னு பேசு றிங்களே. இதெல்லாம் நல்லா யில்ல. பெரியவங்களா இருக் கீங்க. அதுக்கேத்த மாதிரி பேசுங்க.

*மாமி:* என்னடி வாய் நீளுது. எம்புள்ளய நான் திட்னா உனக்கு ஏண்டி அவ்ளோ கோவம் வருது?

*சுசி:* உங்க புள்ள வந்த பெறகு நேர்ல திட்டுங்க. எம் புரு ஷன இல்லாதப்ப அவரப்பத்தி பேசாதீங்கன்னுதான் ஆப்பவும் சொல்றன்.

*மாமி:* அடாடா. இப்பதான் ஒரேடியாக் கெடந்து ஆடுற?

*சுசி:* நா ஒன்னியும் ஆடல. எனக்கு ஆடவும் தெரியாது.

*மாமி:* அப்ப நான் ஆடறனா? யம்மா, இன்னாடி இப்டி வாய்க்கு வாய் எதுத்துப் ப்பசு றயே.

*சுசி:* ஆமா. நீங்க எது வேணும் னாலும் சொல்லுவீங்க. நா கேட்டுகிட்டு சும்மா இருக்க ணும். அப்ப நல்லவ. நியாத்தக் கேட்டா எதுத்து பேசுறவ. நல்ல கதடாயிது. ஒ...யப்பா.

*மாமி:* நீ இவ்ளோ பெரிய வா யாடின்னு முன்னாடியே தெரி யாமப் போச்சே. யப்பா!

*சுசி:* ஏன் இப்பதான் தெரிஞ்சு டுத்துல்ல? இன்னா செய்யப் பொறீங்க? மருந்து வச்சி பிரிச் சுடுங்களேன்.

*மாமி:* எங்களுக்கு தெரியா தும்மா. இந்த மருந்து வக்ய றது, மாயம் பண்றதெல்லாம். எதுக்கு ஒங்கிட்ட அநாவசி யமா பேச்சு. அவன் வரட்டும்.

*சுசி:* வரட்டுமே அவுரு. நானும்

www.padippakam.com

சொல்றன்.

(வெளியிலிருந்து ஒருவர்— அலுவலக நண்பர் நுழைகிறார்.)

நண்பர்: சிஸ்டர்.. சிஸ்டர்.

சுசி: வாங்க. என்னா? என்ன விஷயம்? பதட்டமா வர்றீங்க. சார் வரலீயா?

நண்: சிஸ்டர்... அது... அது வந்து, எப்டி சொல்றதுன்னு தெரீல. சாருக்கு—

சுசி: (அதிர்ச்சியுடன்) சாருக்கு என்னங்க? என்னாச்சி?

மாமி: (பதட்டத்துடன்) இன்னப்பா, எம்புள்ளக்கி என்னாச்சு?

நண்: வந்து...வந்து பயப்படும்படியா ஒன்னுமில்லம்மா. ஒரு சின்ன ஆக்சிடெண்ட். சாரு லேசா மயக்கமாயிட்டாரு. ஆஸ்பிட்டல்ல சேத்துருக்கம். அதான் உங்ககிட்ட விவரம் சொல்லிட்டு கூப்ட்டுகிட்டு போலாம்னு.

சுசி: அய்யய்யோ! அத்த!

மாமி: கடவுளே. எம்புள்ளக்கி ஒன்னும் ஆகக் கூடாது, சாமி!

நண்: ஒன்னுமில்லங்கம்மா. பயப்படாதீங்க.

மாமி: அய்யோ! மலையனூராத் தாயே. அங்காளம்மா. எங் கொழந்தைக்கு எந்த தீங்குமில்லாமக் காப்பாத்தும்மா. தாயே... ஒனக்கு கெடாவெட்டி பொங்கல் வக்யறன் தாயே... அம்மா, சுசிலா. உள்ளே போய் பிளாஸ்க், கூஜாவுல கொஞ்சம் சுடுதண்ணில்லாம் எடுத்துக்க.

சுசி: சரிங்க அத்தே. (உள்ளே போகிறாள்)

மாமி: கடவுளே. மகமாயி. ஏம்மா சுசிலா பணமெல்லாம் இருக்கா? ஏம் பையில சீட்டுப் பணம் ஐநூறு ரூவா இருக்கு. அதையும் எடுத்துக்க... ஏந் தம்பி... (சுசிலா வருகிறாளா என எட்டிப் பார்த்தவாறே) இந்த மாதிரி சேதியெல்லாம் எங்கள மாதிரி பெரியவங்க கிட்ட சொல்லணும்ப்பா. மாசமாயிருக்குற பொண்ணு கிட்ட சொல்றியே அவளுக்கு அதிர்ச்சில எதுனா ஆயிட்டா, எங்க குடும்ப கதி என்ன ஆவுறது?

(சுசிலா பிளாஸ்க், கூஜா போன்றவற்றை எடுத்துக் கொண்டு வெளியே வர, மாமியார் உள்ளே செல்கிறாள்.)

நண்: பயப்படாதிங்க சிஸ்டர். ஒன்னுமில்ல.

சுசி: அதில்லீங்க. (மெல்லிய குரலில்) எங்க அத்தைக்கு ஹார்ட் வீக். இந்த மாதிரி விஷயத்த கேட்டு ஷாக்காயிடுவாங்க. சொன்னிங்களே என்ன மட்டும் தனியா கூப்ட்டு சொல்லக் கூடாது? அவுங்கள நெனச்சா வேற பயமாயிருக்குது. அவுங்களுக்கு எதுனா ஒன்னுனா அவராலேயும் தாங்க முடியாது. என்னாலயும் தாங்க முடியாது.

நண்: சாரிங்க சிஸ்டர். டென்ஷன்ல ஒன்னுமே புரியிலே. ஒன்னும் ஆவாது.

மாமி: (உள்ளிருந்து வந்தபடியே) இந்தாம்மா, சுசிலா. சாமி குங்குமம். வச்சிகிட்டு கௌம்பு. அவனுக்கு ஒன்னும் ஆவாது. அவ இருக்கா ஆத்தா. அவ பாத்துக்குவா... சீக்கிரம் கௌம்பும்மா. போலாம்பா.

—மூவரும் கிளம்புகிறார்கள்.—

படிப்பகம்

www.padippakam.com

# வறுமையுண்டோ!

புல்லுருவி மானிடரை மனச்சான் றென்னும்
பெருநெருப்பும் சுடவில்லை. இல்லா தாரும்
செல்லரித்த நல்லுரையாய்ச் சாவார் என்று
சுழிந்தோடிக் கடலடியைச் சேர்கின் றாயோ!

வெண்முகிலே! நவநவமாய் அழகு காட்டி
விண்ணகத்தில் ஏறிவிளை யாடும் நீதான்
கண்ணீராய்ப் பெருமழையாய் வானை விட்டுக்
கரைந்துருகிப் புழுதியிலே கலக்க லாமோ?
விண்நாண மாளிகைகள் கட்டி ஆங்கே
வீணர்களைக் குடியேறச் செய்து விட்டு
மண்நாண ஏழையர்கள் வாழ்வார் என்று
மனங்குமுறிப் பெருமழையாய்ப் பொழிகின்றாயோ!

ஆர்கலியே! பார்மீதில் நொடிக்கு நூறு
அற்புதங்கள் மின்மினுக்கும் அழகை யெல்லாம்
சீராட்டிப் பாராட்டிச் சுவைத்தி டாமல்
சென்றாழ மாகடலாய் நின்ற தேனோ?
பார்மீதில் ஆயிரமும் வாய்க்கப் பெற்று
பண்பற்றார் இன்பமுற, பாட்டா ளர்தாம்
போராடிச் சாகின்ற கொடுமை காணப்
பொறுக்காமல் போய்மடுவில் புதைந்திட் டாயோ!

காலமெனும் காரிகையே! நீதான் ஏனோ
கண்ணிழந்த மூங்கையென பித்தி யென்ன
ஓலமிடும் மானிடரைக் கண்டும் காணா(து)
ஓடுகின்றாய்? உன்னின்ப வாழ்க்கை ஏட்டில்
கோலமிடும் காதலன்தான் யாரோ? அந்தோ
குறைவாழ்வு வாழ்ந்துவிட்டுத் தொடுவான்
கோட்டில்
காலன்கண்ட கல்லறையில் வாழப் போகும்
கவிமகனோ? அவனிடந்தான் போகின் றாயோ!

—ஆசிரியரின் "ஏழைக் கவிஞன்" இலிருந்து—

படிப்பகம்

www.padippakam.com

Kavithaasaran, June, 1992. Regd. No. TN/MSN/746
CREATIVE LITERARY MONTHLY in TAMIL R. Dis. 5479/90

# ADVERTISEMENT TARIFF

| | |
|---|---|
| Back Cover (Black & White) | Rs. 1250/- |
| Cover inside I & II each | ,, 1000/- |
| Full Print Page | ,, 750/- |
| Half Page | ,, 400/- |

Add 50 % for each additional colour upto 3 colours.

## MECHANICAL DATA

| | |
|---|---|
| Overall Size of the Monthly: | 21.5 cmX 14 cm |
| Print Area | 17.5 cm X 10.5 cm |
| Printing Process: | Letter Press |
| Material preferred: | Matter to be composed & Blocks |

**Your Advertisement in our Monthly is one step forward to help spread Creative Literature in good harmony.**

**சந்தாதாரர் ஆகுங்கள்**
**சந்தாதாரர் ஆக்குங்கள்**

படிப்பகம்